

THE NEW PATTERN OF EDUCATION

புதிய கல்வி முறை 10+2+3

Prof. A.M. Paramasivanandam

The New Pattern of Education

புதிய கல்வி முறை - 10+2+3

Prof. A. M. Paramasivanandam
Retired vice-Principal, Pachaiyappa's College,
Member, Higher Secondary Education Board,
Tamilnadu, Madras-30

தமிழ்க்கலைப் பதிப்பகம்
தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30.

முதற் பதிப்பு டிசம்பர் 1976
உரிமைப் பதிப்பு
பக்கம் 112 + XVIII

விலை ரூ. 3-00

விற்பனை
பாரிநிலையம்
59, பிராட்வே.
சென்னை-1.

அச்சிட்டோர்: மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், சென்னை-2

1.	நூன்முகம்	—	V
2.	Foreword By Thiru C. G. Rangabashyam	—	XV
	,, Thiru Dr. H. S. S. Lawrence		XVII
3.	வளரும் கல்வி	—	1
4.	* New Pattern of School Education By Prof. S. Nurul Hasan Minister for Education, Govt. of India	—	33
5.	* The New Pattern of Education An - Analysis By Dr. G. L. Bakhshi Chairman, Central Board of Secondary Education	—	48
6.	பள்ளிப் படிப்பு		53
7.	* Why and How of the New 10+2 Pattern of School Education		67
8.	இடைநிலை		81
9.	நல்ல நூலின் இலக்கணம்		109
10.	நல்லாசிரியர் இலக்கணம்		110
11.	நன் மாணாக்கர் இலக்கணம்		111
12.	† Scheme of subjects for Higher Secondary Classes.		112

---

* Taken from the book 'A Major change in School Education' published by the Ministry of Education & Social Welfare Govt. of India.

† Taken from the syllabi for standards XI & XII — Maharastra state Board of sec. Education

This book is published on the

Inaguration Day (31 - 12 - 1976) of the

Higher Secondary Education Board of Tamilnadu

By His Excellency The Governor of Tamilnadu

Thiru. MOHANLAL SUKHADIA

At Rajaji Hall, Madras.

நூன்முகம்

வளரும் மனித சமுதாயத்தின் அடிப்படை கல்வியே யாகும், எழுத்து உண்டான நாள் எதுவாயினும், அந்த நாள் தொட்டு மட்டுமன்றி அதற்குப் பலப்பல ஆண்டு களுக்கு முன்பே அவன் கல்வி கற்றவனாக வாழ்ந்து வந் திருக்கிறான். ஏட்டுக் கல்வியும் இலக்கியக் கல்வியும் அவன் வரலாற்றில் எங்கோ பிற்காலத்தில் எழுதப்பட வேண்டியவை. ஆனால் அவன் சூழலும் சுற்றுச்சார்பும் இயற்கையும் பிறவும் நல்லாசிரியர்களாக அமைந்து ஆயிர மாயிரம் வருடங்களாக எவ்வளவோ விதமான கல்வியை அவனுக்குக் கற்றுத் தந்துள்ளன. அவற்றால் அவன் பெற்ற வாழ்க்கைப் பாடமே அவனை மனிதனாக வாழ வைக்கிறது.

வெறும் ஏட்டுக் கல்விதான் மனிதனை வாழ வைக் கிறது என்றே அதுபற்றித்தான் வள்ளுவரோ பிற பெரும் புலவர்களோ 'கல்வி' என்ற தலைப்பில் காட்டிச் சென்றார்களென்றே நாம் கருதுவோமாயின் நாம் பெருந் தவறு செய்தவராவோம். 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்' என்ற குறள் வழி, சமு தாயத்தைச் சார்ந்த கல்வியே பிற ஏட்டுக் கல்வி முதலிய மற்றவற்றிலும் மேம்பட்டது என்று, அன்றே வள்ளுவர் வரையறுத்துக் காட்டிச் சென்றுள்ளார். எனவே 'கல்வி'

மனிதனை வாழ வைக்கப் பயன்படுவதன்றி, போட்டியும் பொருமையும் கொள்ளப் பயன்படுவதன்று என்பதோடு, மனிதன் தான் வாழும் சமுதாயத்தோடு ஒன்றி, அதில் தானும் ஓர் அங்கமாக நின்று செயலாற்றி உயர வழிகாட்டியாக அமைவதாகும். இதனாலேயே 'தாமின் புறுவது உலகின் புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என வள்ளுவர் கூறியுள்ளார்.

இத்தகைய கல்வி முறை நாடு தோறும் பலவகையில் போற்றப் பெறுகின்றது. வெறும் ஏட்டுப் படிப்பால் பயனில்லை என்பதைக் கண்ட பல மேலைநாடுகள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே—ஏன்? — அதற்கு முன்பே வாழ்வுக் கல்வியோடு ஏட்டுக் கல்வியையும் இணைத்துப் போற்றத் தொடங்கி விட்டன. இந்த உண்மையினைச் சுட்டிக் காட்டவே ஆங்கிலப் பேரகராதியிலிருந்து (Encylopaedia Britannica) சில இடங்களை இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளேன். நான் காட்டிய விளக்கங்கள் போன்று இன்னும் எத்தனையோ விளக்கங்கள் எத்தனையோ தலைப்புகளின்கீழ் எழுதப் பெற்றுள்ளன. அளவு கருதி நான் ஒருசிலவற்றையே தொட்டுக் காட்டினேன். ஆசிரியர் பெற்றோர் தொடர்பு, பள்ளி விழாக்களில் பெற்றோர் பங்கு, பள்ளியின் வளர்ச்சியில் பெற்றோர், பொதுமக்கள் பங்கு, வளரும் பள்ளிகளின் எதிர்காலம் முதலியன பற்றியும் தொழிற்கல்வி போன்றவை பற்றியும் வேறு பல ஆக்கப் பணிகள் பற்றியும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்த நாடுகள் காட்டிய அக்கறையினையும் ஆக்க நெறி முறைகளையும் அந்தத் தொகுப்பில் காணலாம். நம் நாட்டில் இந்த வகையான முன்னேற்றங்கள் நாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவில் உள்ளன. நான் எடுத்தாண்ட அந்த 1929 ஆண்டின் பதிப்பிற்குப்

பின் பல பதிப்புக்கள் வந்துள்ளன. அதன் பழமையைச் சுட்டவே அந்தப் பதிப்பின் எழுத்தினைக் காட்டியுள்ளேன்.

இவ்வாறு உலகநாடுகள் வாழ்வின் அடிப்படையான கல்வியில் வேகமாக முன்னேறி வரும்போது நம் பாரதம் மட்டும் இன்னும் உறக்கத்தில் இருப்பது வருந்தத் தக்கதாகும். 1917-ல் உருவான ஒரு கல்விக் கொள்கை இன்னும் நாட்டில் செயலாகா நிலையில் இருப்பதையும் இன்னும் சிலர் இத்தகைய நல்ல மாற்றங்கள் வருவதற்கு முட்டுக் கட்டைகளாக இருப்பதையும் எண்ண வருத்தமே மிகுகின்றது. நம் பாரத நாட்டுக் கல்வி அமைச்சர் இவற்றையெல்லாம் எண்ணி, இக்கொள்கை வளர்ந்த வரலாற்றை நன்கு காட்டி, இன்று குறுக்கே நிற்பர் நிலையினையும் சுட்டித் திறம் படச் செயலாற்ற வேண்டிய நிலையினைத் திட்டமாக விளக்கியுள்ளார்கள். இவை பற்றிய கருத்துக்களை நான் சொல்வதைக் காட்டிலும் கல்வி அமைச்சரைப் போன்ற தக்கார் சொல்வது காட்டப் பெறின் பயனுடைய தாகும் என்ற கருத்திலேயே அவர்தம் எழுத்தினை அப்படியே ஆங்கிலத்தில் இந்நூலில் இணைத்துள்ளேன். இக்கட்டுரை ஏற்கெனவே இந்திய அரசாங்க வெளியீடாகிய (Ministery of Education and Social welfare) 'A major Change in School Education' என்ற நூலில் வெளியிடப் பெற்றுள்ளது. அப்படியே மத்திய கல்விக் குழுவின் தலைவர் தம் கட்டுரையும், மத்திய கல்வி முறையின் விளக்கம் பற்றிய மற்றொரு கட்டுரையும் அதே நூலில் வெளிவந்த வகையில் இங்கேயும் எடுத்தாளப் பெற்றுள்ளன. தக்கவர்தம் எழுத்துக்கள் பெரு விளக்கங்களாக அமையும் என்ற கருத்தினால் இம்மூன்று கட்டுரைகளையும் அரசாங்க வெளியீட்டிலிருந்து உள்ளவாறே எடுத்துக் காட்டியுள்ளேன். அதே வகையில் புதிய XI, XII வகுப்புகளுக்குரிய பாடத் திட்டத்தின் வகையினை மராட்டிய மாநிலம் மேற்கொண்ட வகையில் அப்பாடத்

திட்ட விளக்கமாகிய அவர்தம் வெளியீட்டின் அடிப்படையிலே அப்படியே அமைத்துள்ளேன். எனினும் அந்தப் பாடத்திட்டத்தினை நான் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் அதிலும் பெருமாற்றங்கள் தேவை என்பதையும் இந்த நூலிலேயே சிலவிடங்களில் சுட்டியுள்ளேன். மேலும் அந்தக் கல்வி முறை செயலாற்றுவதில் உண்டான குறைபாடுகளைச் சுட்டிய நாளேட்டின் குறிப்பினையும் அப்படியே அடிக் குறிப்பாகக் காட்டி, அத்தகைய குறைபாடுகள் அனைத்திந்திய அடிப்படையிலோ நம் தமிழகத்திலோ தலைக்காட்டக் கூடாது எனவும் சுட்டியுள்ளேன். அப்படியே பிற கட்டுரைகளிலும் பிறவற்றிலும் உள்ள கருத்துக்கள் அனைத்தையும் நான் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் ஒருசில மேலும் மாற்றம் பெறத்தக்க வகையில் உள்ளன என்பதையும் நூல்வழிச் செல்வார் அறிவர்.

கல்வி வாழ்வோடு பொருந்தியதாக அமைய வேண்டும் என்பதை நல்லவர் யாவரும் வரவேற்பர். கல்விக் கூடங்களெல்லாம் தொழிற் கூடங்கள் இணைந்தனவாக இலங்க வேண்டும் என்று பலர் பேசுகின்றனர். வெறும் பள்ளிப் படிப்பும் வாழ்வோடு பிணைந்ததாக அமைய வேண்டும் என்பதைப் பாரதப் பிரதமர் முதல் பலரும் நம் நாட்டிலும் உலகிலும் வற்புறுத்தி வந்தும் இன்னும் நம் நாட்டில் அது செயல்படத் துவங்காதது வருந்துதற்குரியதேயாகும். ஆங்கில நாளேடாகிய இந்து (1—12—76) நம் பிரதமர் வாக்கினைச் சுட்டி, பிள்ளைகள் பெற்றோருக்கு உதவ இடையிலே பள்ளிக் கல்வியினை விடுவது கூட, அவ்வினை வாழ்வோடு பொருந்தும் ஒன்றுனமையின், மேலானதே என்பதை விளக்கி, எனவே நாட்டுக் கல்வி எல்லோருக்கும் வாழும் வாய்ப்பு அளிக்கும் தொழில் அடிப்படையில்

அமைய வேண்டும் என்பதையும் குறித்துள்ளது [1] இந்த வகையில் நம் நாடு இன்று விழித்துச் செயலாற்ற முற் பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த அடிப்படை யிலேயே புதிய கல்வி முறை உருவாவது வரவேற்கத் தக்கதே.

மேலை நாடுகளில் மிக மிக முன்னேற்ற மடைந்ததாகக் கருதும் அமெரிக்கா, இரஷியா போன்ற நாடுகளில் இத் தகைய கல்வி முறைகள் போற்றப்படும் வகையினை எண்ணிப் பார்க்கவும் நாம் கடமைப் பட்டிருக்கிறோம். பள்ளியில் ஏட்டுக் கல்வியோடு தொழிற்கல்வியும் கற்கும் பிள்ளைகள், தாம் தம் தொழிலால் உருவாக்கிய பொருள் களைத் தம் பெற்றோருக்குக் காட்ட வீட்டிற்கு எடுத்துச் செல்லும் நிலையினைப் பெருமையாக அந்த நாட்டு மக்களால் நடத்தப் பெறும் 'Span' என்ற இதழ் அழகாகக் காட்டு கிறது.[2] இவ்வாறே இரஷியா நாட்டு முன்னேற்றமே இத்

Drop - outs and Non-formal Education
(The Hindu 1-12-76)

1. 'I am not sorry to such a child (the drop-out) because he is a productive member of society, he is helping his family & parants.....I do think this gives a better basis for the future than a child going to school and bring entirely divorced from what the community is doing' (Prime Minister at the conference of District Education Officers on 6-3-1976).

The Slant in non-formal education for over coming the dificiency should be job and environment oriented rural education.

2. Every child who comes here for a day makes some thing that he can take home to show his parants. We put the students into situations where they cannot fail.

(Span. December 1976 p. 42)

தகைய கல்வியின் அடிப்படையில் அமைந்த ஒன்று என்பதை அண்மையில் வெளிவந்த பவன் இதழ் (Bhavan's Journal) நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.[3] மேலும் சில நாடுகளில் 'உற்பத்தி அடிப்படையில் ஊதியம்' என்ற முறை இருப்பது போன்று கல்வி கற்பிற்கும் திறன் மாணவர் தேர்ச்சி நிலை, பயன் பெறுவகை இவற்றின் அடிப்படையில் ஆசிரியர்தம் சம்பள விகிதம் அமையின் நல்ல

Education - Key to Russia's Success

(By R. K. Joshi
(Bhavan Journal, 21-11-76)

3. Work training is an important part of the school curriculum. The purpose of work training is to bring home to the child that his education is closely related to the situations in daily life and the relevance of scientific theory to its application in industry and agriculture. Work training is concerned with the use of hand and develops co-ordination between the mind and senses. It is also intended to cultivate dignity of labour.

(Page 33 & 34)

Thus every youth gets a training to do his job well. More over, 90 percent of persons have practical experience of two years mostly in a factory or farm, what ever their profession in future. (p. 43)

The Soviets take a more comprehensive view of education and its place in the culture, industry economy and the total life of Soviet people They do not look at education in isolation. (P. 44).

The speed of their industrial and agricultural development can be an eye-opener to developing countries if it is appreciated that this is achieved through the medium of education at all levels.

(p. 44)

பயன் வினையும் என்பது கொள்கையாக உள்ளது என எண்ணுகிறேன்.

இவ்வாறு பிறநாடுகளெல்லாம் முன்னேற்றம் காணும் நிலையினைக் கண்ட நம் பாரத அரசாங்கம் விரைந்து தொழிற்படத் தொடங்கி இந்தப் புதிய பாடத் திட்டத் தினைச் செயலாக்கத் தொடங்கியுள்ளமை வரவேற்கத் தக்கதாகும். நம் தமிழகத்திலும் இந்தப் புதிய முறை ஏற்கெனவே கீழ் வகுப்புக்களில் செயலாக்கப் பெற்று விட்டது. இன்று ஒன்பதாம் வகுப்பில் பயிலும் மாணவர் 1978-ல் புதிய முறைப்படி 10-ம் வகுப்பில் தேர்ச்சிபெற்றுப் புதிய இரண்டாண்டு இடைநிலை வகுப்பில் சேர்க்கப் பெறுவர். அதற்கென அமைந்த ஆக்கப் பணிகள் விரைந்து செயல்படுவதறிய மகிழ வேண்டியுள்ளது.

இப்புதிய முறையால் பல பிரச்சினைகள் உருவாகும் எனச் சிலர் அஞ்சுவது குறித்து ஆங்கிலக் கட்டுரைகள் விளக்கி, அவற்றிற்குத் தீர்வு காணும் முறைகளையும், சில அடிப்படை அற்றவை என்ற தன்மையினையும் நன்கு காட்டி யுள்ளன. நானும் ஆங்காங்கே அவற்றின் தன்மைகளைச் சுட்டி, அவை எவ்வாறு தவிர்க்கப் பெறலாம் என்பதை விளக்கியுள்ளேன். நான் என் கட்டுரைகளில் சுட்டிக் காட்டியுள்ளபடி தற்போதுள்ள சில மாநிலப் பாடத் திட்டங்கள், மத்திய பாடத்திட்டங்கள் ஆகியவை உண் மையில் பயன் தரவேண்டுமாயின் இன்னும் மாற்றி அமைக்கப் பெற வேண்டுவனவாகும். வெறும் 11 + 1 + 3 என்ற எண்ணிக்கை 10 + 2 +3 என்ற எண்ணிக்கையாக மாறி, வெறும் ஏட்டுப் படிப்புக் கூடங்களாகப் பள்ளி களும் கல்லூரிகளும் இருக்கக் கூடாது. ஒவ்வொரு உயர் பள்ளியும் ஒவ்வொரு தொழிற்சாலையுடன் இணைக்கப் பெறல் வேண்டும். நாட்டுத் தொழி

லதிபர்கள் தங்கள் தொழிற்சாலைகளுடன் வேண்டிய அளவு பள்ளிகளை இணைத்து மாணவர்களுக்கு வாழ்வுக் கல்வியை ஏட்டுக் கல்வியுடன் இணைக்க வழிகாட்ட வேண்டும். கிராமப்புரங்களில் — தொழிற்சாலை இல்லாத இடங்களில் அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்கள் வழியோ வேறு வழியோ அவ்வச் சூழலுக்கு ஏற்ற தொழிற்சாலை நிறுவ ஆவன செய்ய வேண்டும். இன்னும் எத்தனையோ எண்ணங்கள் உள்ளத்தில் உருவாகின்றன. அவற்றையெல்லாம் பின் தேவையான போது 'கொட்டிக் காட்டலாம்' என எண்ணுகிறேன்.

இத்தகைய முறையில் கல்வி அமையின் நாட்டுச் சமுதாயமும் கல்வித்துறையும் வளர்ச்சி பெறுவதோடு, வேலை இல்லாப் 'பட்டாளம்' நாட்டில் இல்லையாகப் போவதோடு, நாட்டில் எல்லாப் பொருள்களும் எளிதில் கிடைக்க வாய்ப்பும் உண்டாகும். சிறு தொழில் தொடங்கிப் பெருந் தொழில் வரையில் நாட்டில் பெருக, அதன் வழியே கைத் தொழில் திறன் ஓங்க வாய்ப்பும் உண்டாகும். அப்படியே விவசாயம் முதலிய உணவுப் பொருள் பெருக்க நிலையும் போற்றப் பெற நாட்டில் உணவுப் பஞ்சம் நீங்கும். 'எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்த' வழி பிறக்கும். பொருளாராத அடிப்படையே இக்கல்வித்திறத்தால் உயர்ச்சி பெறும். எனவே புதிய கல்வி முறையை, அடிப்படைத் தன்மை கெடாவகையில், அனைவரும் சேர்ந்து விரைந்து செயலாற்ற முன் வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசாங்கமும் சமுதாயமும் எல்லா ஏற்பாடுகளையும் திறன்படச் செய்த போதிலும் அவற்றுல் பயன் விளையுமிடங்களாகிய பள்ளிகளும் கல்லூரிகளும் நன்கு செயலாற்றுவிடின் பயன் விளையாது. இவற்றில் பயிற்றும் ஆசிரியர்கள் திறம்பெற்றவராக, தம் தம் தொழிலிலோ கல்வியிலோ

வல்லவராக அமைதலோடு, சொல்லித் தரும் திறனும் பிறநல்லியல்புகளும் பெற்றவராதல் வேண்டும். அப்படியே பயில்கின்ற மாணவர்களும் எதோ பொழுது போக்குக்கே பள்ளியும் கல்லூரிகளும் அமைகின்றன என்று எண்ணுமல், 'அரசாங்கச் செலவில் ஹாஸ்டல் உணவும் நூல்களும் படிப்பும் கிடைக்கின்றன; நமக்கென்ன' என்ற போக்கில் இராமல், கற்பன கற்றுத் தம்மையும் அதே வேளையில் சமுதாயத்தையும் நாட்டையும் உயர்த்தப் பாடுபட வேண்டிய வகையில் பயில வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டுதான் நல்லாசிரியர் இலக்கணம், பாடம்பயிற்றும் முறை, நன்மாணவர் இலக்கணம், பாடம் பயிலும் முறை ஆகியவை பற்றிப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நன்னூல் காட்டிய கருத்துக்களையும் அப்படியே இணைத்துள்ளேன். அதன் விளக்கங்களுக்கு இலக்கியமாக எழுத்தினைக் காட்டுவதைக் காட்டிலும் நாட்டு நல்லாசிரியர்களையும் நன் மாணாக்கர்களையும் காட்ட வேண்டும் என்ற உணர் வுடனேயே அவற்றிற்கு விளக்கம் எழுதாது விட்டு விட்டேன். நாட்டுக் கல்வி இத்தகைய நல்லாசிரியர் வழி நன்மாணாக்கரை உருவாக்கும் வகையில் செயல்படுவதாக! அப்படியே நல்ல தரமான நூல்கள் வெளிவர அரசாங்கம் ஆவன செய்வதாக!

தமிழக அரசாங்கம் புதிய திட்டத்தைச் செயல் படுத்தத் தொடங்கியுள்ளது. புதிய விதிமுறைகள், பாடத்திட்டங் கள், பாடநூல்கள், ஆசிரியர் தகுதி, பயிற்றும் முறை, தேர்வு முறை, தேர்வு நிலை முதலிய பலவற்றைப் பற்றி எண்ணிச் செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

இப் புதிய கல்விமுறை பற்றித் தமிழில் விளக்கமான நூல் இல்லையென எண்ணிய காரணத்தினாலேயே இந்த நூலை எழுதத் துணிந்தேன். அன்றி நான் இத்துறையில் வல்லவன்

என்றோ வேறு காரணத்தாலோ எழுதவில்லை. இந்த முறையின் அடிப்படை நம்நாட்டுக்குப் பழமையான தென் பதையும் பயன்தரத் தக்க தென்பதையும் சுட்டிக் காட் டியுள்ளேன். இந்நூல் பற்றிய கருத்தைச் சொல்லிய போது இதை விரைவில் வெளிக் கொணரவேண்டும் என என்னை ஊக்கி முன்னுரை அளித்த தமிழ்நாடு கல்வித் துறைச் செயலர் திரு. C G. Rangabashyam அவர்களுக்கும் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு Dr. H. S. S. Lawrence அவர்களுக்கும் தில்லி மத்திய கல்விக் குழுவின் தலைவர் திரு Dr. G. L. Bakhshi அவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டவனாகின்றேன்.

இந்நூல் ஓரளவு புதிய கல்வி முறையினைப்பற்றி அறிய உதவும் என நம்புகிறேன். இம்முறை நம் மாநிலத்தில் செயல்படத் தொடங்குமுன் இது பற்றி அரசாங்கமும் பல வெளியீடுகளை வெளியிடலாம். நானும் பின்னர் இயலுமேல்- வாய்ப்பு நேருமானால் - இது பற்றி இன்னும் விளக்கமாக எழுதலாம் எனக் கருதுகிறேன்.

இந்நூல் வெளிவரக்காரணமாயிருந்த அனைவருக்கும் நன்றிகூறி இந்நூலைத் தமிழ் மக்கள் முன் வைக்கிறேன். இதில் - என் கட்டுரைகளில் - உள்ள பல கருத்துக்கள் என் உள்ளத்து எழுந்தவை. இவை காலத்தால் ஏற்றுக் கொள்ளப் பெறும் என்ற நம்பிக்கையுடன் அனைவருக்கும் வணக்கமும் நன்றியும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பணிவுள்ள,

சென்னை-30
31—12—76

அ. மு. பரமசிவானந்தம்.

FOREWORD

A major reform in the Educational system, as recommended by the Kothari commission in 1966 and accepted by a policy resolution of the Government of India in 1968, is in the process of introduction in several parts of the country. Tamilnadu has also fallen in line with other states and has decided to implement the reform effective from 1978. The reform consists mainly of restructuring the terminal years and is popularly known as 10+2+3. Thanks to the wide publicity in the press all over the country the public are aware of the 'term' 10+2+3. But what exactly it is and why it is sought to be introduced requires a detailed explanation for the benifit of the general public. Such an explanation is provided in this book lucidly written by Prof. A. M. Paramasivanandam.

Himself an experienced teacher, well-versed in several facets of education and as one who is presently experiencing the organisation and conducting of a popular Higher Secondary School, he is eminently fitted to write on this subject. He deserves great appreciation for having planned to bring out a book of this kind. His effort in this regard is not only laudable but also timely.

Written in simple and telling Tamil prose the book consists of extracts of speeches and writings of men in

authority on the subject in English and they have been added as they are at appropriate places. This idea, which ensures cogency and Continuity to the reader, is highly commendable and fecilitates a correct and complete understanding of the subject. The value of this book is greatly enchanced by the several useful foot-notes given therein extracted in original from the sources.

Chapters 9, 10 and 11 defining an ideal book, an ideal teacher and an ideal student respectively are a welcome addition.

As Education Secretary I have been nursing a desire to have some material produced for popular use on this subject. I am happy that the author of this book has more than fulfilled my desire. I join with him in the hope he has expressed herein that the educational system in our country with the accent on national integration will be so evolved that the accent will remain undisturbed not withstanding the changes in the political set up in the different states.

I commend this book to educationists as well as to the general public alike.

C. G. Rangabashyam I. A. S.

Education Secretary

Government of Tamilnadu, Madras.

FOREWORD

The new pattern of Education, commonly stated as 10+2+3, is purposeful and meaningful. It is so evolved that there is relationship between the needs and interests of pupils and those of society. The new pattern streamlines educational organisations in India and will promote national integration and mobility. Public understanding and public support will help in the smooth implementation of the scheme. It is in this context that I welcome useful booklets like this one brought out by Professor A. M. Paramasivanandan.

H. S. S. Lawrence
Director of School Education
and
Chairman, Board of Higher Secondary Education
TAMIL NADU

'மங்கல மாகி இன்றி யமையாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே'
(நன்னூல்)

எனப் பூவின் இலக்கணம் கூறி அதனை நல்லாசிரியருக்கு உவமித்தார் பவணந்தி. அது நல்லாசிரியருக்கு மட்டுமன்றி நல்ல கல்விக்கும் பொருந்திய உவமையாகின்றது.

ஆம்! கல்வியாகிய மலர் மக்கள் வாழ்வின் மங்கலப்பொருளாகி - சமுதாயத்துக்கு இன்றி யமையாத ஒன்றாகி - எல்லாருக்கும் இன்பம் அளிக்கும் நிலையில் அமைந்து-அவ்வக்காலச் சூழலுக்கும் நிலைக்கும் ஏற்ற கருத்துக்களுடன் வன்மை நீங்கி மென்மை காட்டி., தானும் மலர்ந்து மக்கள் அகமும் முகமும் மலர அவர் கள் வாழ்வையும் மலர வைப்பதாகும்.

A Good Education is one that enables you to understand life and society better.

வளரும் கல்வி

அன்றும் இன்றும்

தமிழ் நாட்டுக் கல்விமுறையில் பெருமாற்றம் புகுத்த ஆவன நடந்து கொண்டிருக்கின்றன. அனைத்திந்திய அடிப்படையில் இம்மாற்றம் செயல்படுகிறது. மாணவர் பயிலும் போதே தொழில் நலம் பெறத் தக்க வகையில் - வருங்காலத்தில் தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ளும் வகையில்-புதிய கல்வித்திட்டம் திட்டப் பெறுகிறது. மத்திய அரசும் மாநில அரசுகளும் பல கோடிக்கணக்காகக் கல்விக்குச் செலவிடும் பெரும் பொருள் வீணே பயனற்றுக் கழிவதை எண்ணி எண்ணி, புதிய பயனுள்ள கல்விக்கு வகை தேடுகின்றன. இந்த வகையில் எத்தனையோ மாற்றங்கள் இப்போது வருகின்றன. இந்த மாற்றங்களே வேண்டாமெனச் செல்லுபவர்களும் உளர். ஆயினும் சூழ்ந்து நோக்கின் இத்தகைய கல்வி முறை தமிழ்நாட்டுக்கு- ஏன் - இந்திய நாட்டுக்கே புதிய ஒன்றன்று என்பது விளங்கும்.

இந்திய நாட்டின் பழங்கால வாழ்வை நமக்கு விளக்கிக் காட்டுவன இலக்கியங்களே. வடநாட்டு இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களும் தமிழ் நாட்டுச் சங்க இலக்கியங்களும் அக்கால வாழ்வை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவை காட்டும் கல்விமுறை

பற்றி ஓரளவு எண்ணின் இன்று நாம் காண இருக்கும் கல்விமுறை மிகப்பழமையான ஒன்று என்பதோடு பயனுள்ள ஒன்று என்பதும் நன்கு புலனுகும்.

இராமனுக்கு வசிட்டன் கல்வி கற்பித்தான். அக்கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக - வாழ்வுக்குப் பயன்படாத தேர்வுக் கல்வியாக மட்டும் அமைந்து விடவில்லை. கற்பன கற்றுக் கலைகளும் பயின்ருன். அவற்றேடு அவன் நாடாளும் மன்னன் மரபில் வந்தவனுதலின் அரசியலுக்கு உரிய போர்க் கல்வி, படைக்கலக் கல்வி போன்றவற்றையும் மக்களுக்கு வழிகாட்டும் கலை நலக் கல்விகளையும் விளக்கினன் வசிட்டன். இந்த நிலையினைக் கம்பர்,

இவளவது எனஒரு கரைபிறிது இலவா
உவளரு மறையினெடு ஒழிவறு கலையும்
தவள்மதி புனை அரன் நிகர் முனி தரவே

(திருஅவதாரப் படலம் 122)

யானையும் இரதமும் இவுளியும் முதலா
எனைய பிறவும்அவ் வியல்பினில் நடைகற்று
ஊனுறு படைசில சிலையொடு பயிலா
வானவர் தனிமுதல் கிளையொடு வளர

(திருஅவ. 123)

என இராமன் பயின்ற கல்வியோடு பிறகலைகளையும் விளக்குகிறார். இவ்வாறு கற்ற இராமன் தனிப்பட்ட முறையில் நில்லாது, தன் கிளையொடு கலந்து பயின்று வளர்ந்தான் எனவும் காட்டுகிறார் இங்கே 'கிளை' என்பது வெறும் அரச உறவினர் என்பதோடு அமையாது உடன் ஆசிரியரிடம் பயின்ற பிற மாணவர்களாகிய கிளைஞர் எனக் கொள்ளல் சாலும். எனவே வசிட்டரிடம் கலை பயின்ற அனைவரும் வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் கல்லாது வாழ்வுக்குத் தேவையான கல்வியினையும் (Vocational

Training) கற்றூர் என்பது புலனுகின்றது. மேலும் ஆசிரியர் உயர்நிலையினைக் கம்பர் வசிட்டனைச் சிவனெடு ஒப்பிட்ட வகையில் உயர்த்திக் காட்டுகிறூர்.

இதிலிருந்து மற்றூர் உண்மையினையும் நாம் அறிதல் வேண்டும். இன்று பாடத்திட்டங்கள் அமைவது போன்று, யாரோ பிள்ளைகள் உள்ளங்களை அறியாதவர்கள் எங்கோ இருந்து கொண்டு, அவரவர்களுக்கு வேண்டியவர்கள் எழுதிய பாடங்களையும் நூல்களையும் கட்சிக் கொள்கை களையும் திட்டத்தில் புகுத்திப் பாடத்திட்டம் என அதற்கும் பெயரிட, அதை நாட்டின் கோடிக்கணக்கான குழந்தை களும் பிள்ளைகளும் கட்டாயம் கற்க வேண்டிய அவலநிலை அன்று இல்லை. நாட்டிலே உள்ள பிள்ளைகளை கூட்டு மந்தைகளாக்கிப் பள்ளி வகுப்பில் ஒன்றிக்கு 75 (அ) 80 பிள்ளைகளையும் கல்லூரிகளில் 100 (அ) 150 வரை மாணவர் களையும் இருக்க வைத்து, எதையோ யாரோ கற்றுத்துத் தருவதாக அமையும் கல்விமுறையும் அன்று இல்லை. ஊர்தோறும் வாழ்ந்த சிறந்த அறிஞர்களிடம் பிள்ளைகள் ஒப்படைக்கப் பெற்றனர். அவர்களிடம் செல்வம், பதவி, பட்டம், இவற்றுல் உயர்ந்தார் என்றே அவை இன்மையால் தாழ்ந்தார் என்றே வேறுபாடு கிடையாது. கல்வி கற்க விரும்பும் யாரும் நல்ல ஓர் ஆசிரியனை யடுத்துக் கலைக் கல்வி யும் வாழ்வுக் கல்வியும், அவருடன் ஒருங்கிருந்தே கற்றனர். அரசர் குடும்பத்தவனுகிய கண்ணனும் ஏழைக் குடும்பத்த வனுகிய குசேலனும் சாந்தீப முனிவரிடம் ஒருசாலை மாணவராக இருந்து கல்வி கற்றமை அறிந்த வரலாறு. இவ்வாறே தமிழ் நாட்டிலும் பெருமன்னனுக வாழ்ந்த சேரன் செங்குட்டுவன் தன் ஒரே மகன் குட்டுவன்சேரலைப் பரணர் என்னும் புலவரிடம் ஒப்படைத்தான் எனப் பதிற்றுப்பத்தால் அறிகிறேம். 'கொடுத்தான்' எனக் குறிக்கப் பெறுதல் (பதிற். ஐந்தாம்பத்து - பதிகம்) அறிவு

பெற அவன் வழி ஆற்றுப்படுத்தான் என்ற வகையிலே அமைகின்றது. எனவே இந்திய நாடு முழுவதிலும் - வடக் காயினும் தெற்காயினும் - உத்தரப்பிரதேசமாயினும் கேரள மாயினும் இத்தகைய நல்லவரும் வல்லவருமாகிய ஆசிரியர் களிடத்துப் பிள்ளைகளை ஒப்படைத்துக் கல்வி அளிக்கும் முறை அக்காலத்தில் சிறந்திருந்தமையைக் காண்கிறோம்.

பாரதத்திலே வரும் மற்றொரு கதை இங்கே நமக்கு நினைவுக்கு வருகின்றது. ஏகலைவன் கதைதான் அது. துரோணர் ஏதோ சாக்குக் காட்டி அவனை மாணவனாக ஏற்றுக் கொள்ளாத போதிலும், அவன் தனித்த முறையிலே அவர் மற்றவர்களுக்குக் கற்றுத் தந்த பாடங்கள் அனைத்தை யும் அவர்தம் மாணிக்கரைக் காட்டிலும் சிறக்கக் கற்று உயர்ந்தான் எனக் காண்கின்றோம். இந்த வகையில் தான் இக்காலத்திலும் செயல்முறையைச் சார்ந்த கல்வி - (Formal Education), தகுதிபோற்றும் கல்வி - (Open University Education) போன்று பல பேசப் பெறுகின்றன. வகுப்பில் சட்டாயமாக உட்கார வேண்டிய நிர்ப்பந்தத்தால் உட்கார்ந்து, பலரொடு கூடிப் பல கெட்ட பழக்கங்களால் கெட்டுச் சீரழியும் சில மாணவர்களைப் போன்றும் அவர் களால் பிறரும் கெடும் கல்விநிலை போன்றும் இன்றித் தனி யாற்றல் பெற்றால், நல்லாசிரியர் காட்டும் நெறி நின்று வல்லவராதல் சிறப்பு என்பதையே இந்த ஏகலைவன் கதை நமக்குக் காட்டுகின்றது. மாலைக் கல்லூரிகள், அஞ்சல்வழிப் பயிற்சி முறை போன்ற நடைமுறையில் உள்ளவையும், இனி வர இருக்கும் நேரடி உயர் தேர்வுக்குச் செல்லும் தகுதி போற்றும் கல்வி முறைகளும் இந்த அடிப்படையில் அமைந் தனவே. ஆழ்ந்தகன்ற கல்வி நலம் பெற வேண்டுமாயின், கற்போர் உள நிலைக்கு ஏற்பக் கல்வி அமைய, அவர்கள் தனியாகவோ தேவையாயின் ஒரு நல்லாசிரியர் வழியோ அக்கல்வியைக் கற்றல் அமைவுடைத்தாகும். தற்காலப்

போட்டி உலகில் சான்றிதழ் தேவையானமையின் அவர்கள் தகுதிக்கு ஏற்ற வகுப்பில் அவர்களைத் தேர்வு எழுதச் செய்து வெற்றி பெறின் சான்றிதழ் வழங்கல் பொருத்த மாகும். மத்திய கல்விக் குழுவினர் பத்தாம் வகுப்பு வரை யில் பயிலும் மாணவர் தகுதியும் திறனும் பெற்றிருந்தால், ஓராண்டு முன்பாகவே அத்தேர்வு எழுத அனுமதிக்கப் பெறுவர் என வழி செய்திருப்பது போற்றற்குரியது. இந்த வகையில் இந்திய அரசாங்கம் செயல்படத் துவங்கி இருப்பது மகிழ்ச்சிக்குரியது. அடுத்த ஆண்டிலேயே, 'Open University system' நாட்டில் சில பகுதிகளில் செயல் பட இருப்பதும் வரவேற்கத்தக்கதே. இது பற்றி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இது சம்பந்தமான இந்திய அரசாங்கக் கல்வி அதிகாரி திரு. J. P. நாயக் (Adviser) அவர்களுக்கு இந்த முயற்சியினைப் பாராட்டிக் கடிதம் எழுதியுள்ளேன். அவர்களும் தம் (D. O. No. F 10-1/73-Ph.11 dated 31-5-73) கடிதம் வழி என் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாகப் பதில் எழுதியிருந்தார்கள். இவ்வாறு பண்டைக் காலத்தின் வழக்கத்தில் பலவகையில் நாட்டில் பயின்று வந்த கல்வி முறையே இங்குப் புதுப்பிக்கப் பெறுகின்றதாதலின், இதைக் கண்டு மருளவோ, மயக்க முறவோ காரணமில்லை. மாறாக அனைவரும் இணைந்து இந்த முயற்சிக்கு ஆக்கம் தேடுவோ மானால் நாடு நல்ல வகையில் முன்னேற வாய்ப்புக்கள் உள்ளன என்பதை அறியல் வேண்டும்.

கல்வி என்பது யாது?

'கல்வி என்பது யாது?' என்ற வினாவிற்கு விடை காண்போமாயின் அதில் நாம் இன்று கொள்ள விரும்பும் முறை சிறப்புடைத்து என்பதும் வாழ்வளிக்கும் கல்வி என்பதும் தெளிவாகும். வெறும் ஏட்டுப் படிப்பு, அதிலும் மூலநூலைப் பயிலாது, குறிப்பேடுகளைப் படித்துவிட்டுத்

தேர்வு தாண்டியதும் அனைத்தையும் மறந்து விடுவதன்று. வெறும் 100 க்கு 100 வாங்கும் மனப்பாட அறிவுகோலன்று கல்வி. கல்வி என்ற சொல் அந்த அளவில் பொருள் தருவதாகாது. கல்வி என்பதைக் காட்ட வந்த வள்ளுவர், அதை வாழும் உயிர்க்குக் கண் என்கின்றார். ஒருவருக்கு உலகில் உலவக் கண் எப்படி அவசியமோ, அதுபோன்றே கல்வி அவசியமாகின்றது. மற்றவர் துணையின்றிக் குருடன் வாழ முடியாது மற்றவர் துணையின்றி உலகில் கண்ணுடையார் தாமே தனித்து இயங்க வல்லவர்தாமே. ஆமாம்! கல்வியும் அவ்வாறே (குறள் கல்வி 2&3) தன்னைச் சேர்ந்த மனிதனை, மற்றவர் துணை இன்றித் தானே இயங்க வைப்பது. அவன் வாழ்வை அக்கல்வி வளமாக்குவதாகும். அது மட்டுமன்று; அவன் கல்வி அவனை எங்கே சென்றாலும் - எந்தநாட்டில் இருந்தாலும் வாழவைப்பது; (குறள் கல்வி.7) அதற்கும் மேலாக அவனை எழுமையும் வாழவைப்பது. எழுமை என்பதன் பொருளையும் இங்கே ஆராயவேண்டா. எனினும் அக்கல்வி ஒன்றுக்கு மேலாய எண்ணற்ற பல நன்மைகளைப் பயக்கும் தன்மை உடையது எனக் கொள்ளலாம். ஓரிடத்தில் அவன் கற்ற கல்வி, அவன் செல்லுமிடத்திலெல்லாம் - எழுமிடத்திலெல்லாம் அவனை வாழவைப்பதாகும். (குறள். கல்வி. 8). இவற்றின் அடிப்படைகளிலெல்லாம் இன்றைய கல்வியை எண்ணிப்பார்க்கின் உண்மை விளங்கும். இன்றைய கல்வி இவற்றையெல்லாம் தருவதாயின் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் எழக் காரணம் இல்லையே - மக்கள் 'பட்டம் வேண்டாம்; சோறுபோடு, வேலைகொடு' என்று பட்ட மளிப்பு விழாவில் கொடிதூக்கிக் கூக்குரலிடத் தேவையில்லையே. எனவே இன்றைய கல்வி உண்மையான கல்வி இல்லை என்பதுதானே பொருள். இதை உணர்ந்தே உண்மைக் கல்வியைத் தர இந்திய அரசாங்கம் முயல்கிறது.

கற்றூர்தம் சிறப்பினைக் கூறவந்த வள்ளுவர். 'தாமின் புறுவது உலகின்புறக் காணல்' என்கின்றார். இன்றைய கல்வி இந்தச் சிறப்பை நல்குகிறதா? மாறாக, பத்தாவது வகுப்போ பட்ட வகுப்போ படித்து, உத்தியோகத்துக்கு விண்ணப்பம் போடும்போது, இருக்கும் ஒரு இடத்திற்குத் தான் மட்டும் தெர்ந்தெடுக்கப் பெற வேண்டும்; மற்றவர் அனைவரும் அழியவேண்டும் என்று தானே ஒவ்வொருவரும் எண்ணுகின்றனர். எனவே 'தான்வாழப் பிறர்கெட' எண்ணும் கல்வி ஒரு கல்வி யாகுமா?

கல்வி என்ற தலைப்பில் ஆங்கிலப் பேரகாதி (Encyclopaedia Britannicca) ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே நல்ல விளக்கம் தந்தது.[1] வளர்ந்து வருகின்ற மக்கட் சமுதாயத்தில்

---

1. The Encyclopaedia Britannica (Fourteenth Edition-1929) (Vol 7. Page Nos: 964 & 965)

Educational Theory:— Definition

Education is, thus a definitely personal work and will vary between wide extremes of effectiveness and worth in any given society For in all times and places there are wide differences in virtue, wisdom and capacity among those who have in their hands the care and nurture of the young. Yet, despite these differences every teacher expresses, more or less perfectly and clearly, the current conception and outlook of his age, and country. The first essential for successful educative effort is, then, that the community as a whole should have a true estimate of the nature and value of education.

Assuming however, a well-inspired community and teachers capable of fulfilling its will, it is not possible to say, except in most general terms, how it will educate its children. For although looking

Foot - Note: Contd

at the individual to be educated, we may say with Plato that the aim of education is "to develop in the body and in the soul all the beauty and all the perfection of which they are capable", this leaves quite undecided the nature and form of that beauty and perfection, and on such points there has never been universal agreement at any one time, while successive ages have shown, marked differences of estimate. Individual beauty and perfection are shown, and only shown, an actual life, and such life has to be lived under definite conditions of time, place, culture, religion, national aspirations and mastery over material conditions. Perfection of life, then, in the Athens of the age of Plato would show a very different form from that which it would take in the London, Paris or New York of today. Hence, so far as any conception of education can give guidance to the actual process it must be relative in every way to the state of development of the society in which it is given

Education and the Community: There is one respect in which the constitution and general outlook of a community are especially likely to affect the character of its education. Education aims at conserving and perfecting the li e of the community, but that life is nothing other than the life of its individual members. In an ideal community there should be complete identification between the interests of every unity and of the whole; but history records no ideal communities. In practice there are always divergences, leading to exploitation here and sacrifice of development there. Societies in different times and places differ from one another then, in their degree of success in reconciling the interests of the whole with the claims of individual development, or in their willingness to subordinate the latter to the former; and their

Foot - Note: Contd.

educational conceptions naturally reflect these differences. The primitive tendency in communities is towards the complete subordination of the individual, but in the western peoples that tendency has since the advent of Christianity, been checked and modified by an increasing valuation of the individual life. It is an apparently paradoxical, but easily intelligible, fact that the World War, by its startling revelation of the immense range, the intimate closeness and the vast complexity of modern social organisation, actually stimulated the reaction against the primitive tendency and the educational ideas which expressed it. Educational theory must always be more or less "paidocentric"- that is, must focus its attention in the first place upon the single child and upon the gifts and powers which make him educable; but in its recent trend it goes beyond that, and tends to regard the perfection of the individual as the proper end of educational efforts. This does not imply a disregard of social claims or point towards social disintegration; the view is that the best forms of communal life will be fostered by an education which regards social activities as a necessary medium for the development of the higher stages of individual life rather than something to which the claims of individual development must be subordinated. This conception held with more or less conscious clearness, has guided much of the typical development which, prominent, in America (see Education: Science of and History of Education, United States) and to a less extent in Britain before the war, has since 1918 proceeded apace in most civilised countries.

The most striking sign of the change of view here in question is afforded by the reorganisation of public education now going on in the more

முந்திய தலைமுறையில் உள்ளவர்கள் அடுத்துவரும் தலை முறைக்குச் சமுதாயத்தில் வாழ வழிகாட்டும் முறையே கல்வியெனச் சுட்டுகிறது. மனித சமுதாயத்தை உருவாக்கு வதே கல்வி-சமுதாயத்தை இணைந்து வாழ வைப்பதே கல்வி. அவரவர் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் பயன்தருவகையில் அமைவதே கல்வி. இன்றைய கல்வி இந்த அடிப்படையில் உள்ளதா? படிப்புக்கும் சமுதாய வாழ்வுக்கும் ஏதேனும்

Foot - Note: Contd.

progressive lands. Its distinctive feature is the replacement of the old conception, in which elementary and secondary schools corresponded mainly to social stratification, by the idea that children of all classes should have the opportunity of a primary education, designed to meet the needs of childhood, followed by a post-primary or secondary education adjusted to the needs of adolescence. In the United States this idea is embodied in the system of primary school *(q v.)* followed by junior and senior high schools *(q.v.)* on the "six-three-three" principle. *(See* ELEMENTARY EDUCATION IN THE U.S. and SECONDARY EDUCATION IN THE U.S.*)* In England it underlies the proposals of the Report of the Consultative Committee of the Board of Education on the Education of the Adolescent (1926) It has also inspired the post war changes in the State systems of the German **Reich.** In part these developments have no douot come about because modern industry and forms of government demand in the average citizen a higher standard of knowledge and training than formerly sufficed. But the fundamental explanation is to be found in the conception that a community should place the best opportunities of self-development and realisation within the reach of all of its members who are capable of profiting by them.

சம்பந்தம் இருக்கிறதா? பெரும்பாலோர் படிக்கிற அறிவியல் படிப்பிற்கும் பின் அவர்கள் பணியாற்றும் 'எழுத்தர்' பணிக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா? சிறப்பாக நம் நாட்டில் 'கல்வி' கற்றூர் நிலை மிகக் கேவலமாக இருப்பதை யாரே அறியாதார்!

இந்த ஆங்கிலப் பேரகராதி இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இப்போது நாம் நினைக்கும் கல்வியைப் பற்றி விளக்கியுள்ளது, கல்வியைத் தொழிலோடும் வாணிபத்தோடும் இணைத்து, மக்கள் வாழ்வொடும் சூழலொடும் இணைத்து எவ்வாறு அதை வளர்க்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டி, மேலைநாடுகளில் அந்த நாளிலேயே அவர்கள் செயலாற்றத் தொடங்கிய திறனையெல்லாம் விளக்குகிறது.[2] அந்நெறி போற்றற் குரியதாகும்.

---

2. Encyclopaedia Britannica (fourteenth Edition 1929) Vol: 7 Page No: 966:—

On the other hand a training based mainly upon the study of the ancient classics is not entitled to be called liberal unless given in such a way as to make the student a freeman of the modern world, sensitive to its ideas and awake to the significance of its intellectual and social movements.

o o o

Page No. 968:

In brief, the essence of the school polity consists in a regulation of the lives of the young by adults for purposes which the adults selected. Yet since the chief of these purposes is that boys and girls may learn to live worthily, as men and women, the common life of the great society, it would seem that the fundamental features of that life should in some form be represented in the school society.

Vocational Training, Work experience என்றெல்லாம் நாம் புதியவனதாகக் கேட்கும் சொற்கள், வளர்ந்த நாடுகளில் அரை நூற்றாண்டுக்குமுன்பே மிகப் பழக்கத்தில் வந்த சொற்களாக மட்டுமன்றி - செயல்களாகவே அமைந்துள்ளதை எண்ணும்போது கல்வியில் நாம் எவ்வளவு பின் தங்கிய நிலையில் உள்ளோம் என எண்ணி வருந்த வேண்டியுள்ளது அல்லவா.

Foot - Note: Contd

Page No: 971:

Shool Experiments: Another movement has grown quietly without the support of a great name, but spreading by its own reasonableness. This is the 'ruralizing'' of many schools, not only in the country but also in many towns. When this goes no further than nature study, it is a recognition that school lessons should be related to the child's surroundings. But gardening is very popular and a school often includes bee-keeping and even poultry keeping. The Welsh Department of the Board of Education have stimulated the extension of the idea that rural lore including history, antiquities, architecture, folk-song and speech, should be cultivated in country schools. Connected with this trend is the tendency to localize the geography teaching on the one hand, and by studying closely geography of the town, village or region, and on the supplement the local study by school journeys. School journeys are not for all, since their management requires very special organising and personal care In small numbers they preceeded the Boy Scout movement (See Boy Scouts), but they proved practicability of school journeys reinforced the camping idea of the Scouts, and camps grew in popularity. One annual camp under the patronage and the personal attention of the Duke of York, combining boys from the

அடிமை நாட்டில் வாழ்ந்த பாரதியார் 1920 க்குமுன் நாட்டுக் கல்வியைக் கண்டு எவ்வாறு உள்ளம் நைந்து பாடினர் என அறிவோம். அந்நிலையில் உரிமை நாட்டில் உரிமை பெற்று முப்பது ஆண்டுகள் கழிந்த பின்பும் மாறுதிருக்கும் நிலையினை அவர்கண்டால் எவ்வளவு நைந்து உருகுவார் என நினைக்க வேண்டி யுள்ளது. எத்தனை கணித முதுகலை கற்றவர்கள் எழுத்தராகப் பணியாற்று கின்றனர்? எத்தனை உயர் படிப்பாளர் ஊர் ஊராய்ச் சுற்றி

Foot - Note : Contd.

public schools and boys brought up in elementary schools, is a noteworthy example of an attempt to create a sympathy between classes brought up very differently. Both secondary and primary schools have organised school journeys and school camps in other countries. The great extension of self-government (see above) in elementary schools and the movement for providing playing fields for elementary pupils has had a most profound effect on the character and physique of the younger generation. Within the school itself the holding of school exhibitions and open days for parents are forging a valuable link between home and school.

Handicraft Work: The progress of instruction in handicrafts is on the whole slow, for this form of instructions is apt to be expensive. But the idea that handicraft for girls, as well as for boys, is an essential element in education has undoubtedly grown. Handicraft for boys means usually work in wood and metal; and for girls besides needle work and cookery, laundry work, house-craft and the simpler beginnings of crafts like weaving, basketry, emboriedery, lace making and pottery.

எந்த வேலையும் செய்யத் தயாராக உள்ளனர். பாரதியின் அடியினையே இவர்கள் முன்னர் வைப்போம். பயன்?

' கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்
அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலார்
வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்
வாழும் நாட்டில் பொருள்கெடல் கேட்டிலார்
துணியும் ஆயிரம் சாத்திரம் கற்கினும்
சொல்லுவார் எட்டினைப் பயன் கண்டிலார்'

என்று அவர் பாடும்போது, அக்காலத்தில் தொழில் அனுபவம் (work experience) இல்லாத கல்விநிலை கண்டு எவ்வளவு ஏங்கியுள்ளார் என்பதை அறியமுடிகின்றதன்றோ? படித்ததைப் 'பிதற்றுவார்' என்று அவர் கூறவேண்டுமானால் அவர் உள்ளம் எவ்வளவு நைந்திருக்கும். ஆனால் இன்றும் அந்த நிலை — அவலம் — மாறவில்லையே. ஒரு வேளை அவர் திரும்பி வந்து காண்பாராயின் இப்படிச் சீர் கெடவா நம் பாரத நாடு சுதந்திரம் அடையப் பாடுபட்டேன் - பாட்டிசைத்தேன் என்று நைந்து போகமாட்டாரா? ஆம்! இந்த அவல நிலையைப் போக்கவே இன்று அனைத்திந்திய அடிப்படையில் கல்வியில் பெருஞ் சீர்திருத்தம் காண இந்திய அரசாங்கத்தார் முயல்கின்றனர்.

பாரதியார், உயர்ந்த இலக்கியம் படிப்பதோடு - ஏன்? - படைப்பதோடு உடன் தொடர்ந்தே பல்வேறு கலைத் தொழில்களையும் நாட்டுக்கு வேண்டிய நல்ல தொழில் களையும் - தேவையாயின் உலகத்தொழில் அனைத்தையும் செய்வோம் என்று பாடுகிறார்.

' காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்'

என்று எக்காளமிட்டுப் பாடுகிறார். அந்த விடுதலைக் கவிஞன் விழைவையே இன்று இந்தியா செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. .

ஆங்கிலேயர் தம் கல்வியினால் பலனில்லை என்பதைக் கண்ட பாரதியார், புதியதோர் உலகு சமைக்கக் கிளர்ந் தெழுந்து, அவ்வுலகில் - நாட்டில் கல்வி, கைத்தொழிலோடு இயைந்து செல்ல வேண்டிய இன்றியமையாமையைப் பல பாடல்களில் விளக்கிக் காட்டுகின்றாரே. படித்தவர் தொழிலிடைப் புகுந்து புதுமை விளைக்கும் செயல் திறனைப் பாரதியார் பல படப் பாடியுள்ளாரே. அந்தச் செயல் திறன் எப்போது முகிழ்க்கும்? ஆம்! படிக்கும் காலத்திலேயே அத்தகைய நல்ல பயிற்சிகளைப் பெறல் வேண்டும் — அரசாங்கம் தர வேண்டும். உரிமை பெற்று இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்த பின்னரே இந்தப் பாதையில் அரசாங்கம் கருத்திருத்துகின்றது. தொடக்க நாளிலேயே இந்த அடிப்படையை ஆராய்ந்து செயல் பட்டிருப்பின் நாட்டில் எத்தனையோ கொடுமைகளை நாம் கண்டிருக்க மாட்டோம். தற்போது இத்துறையில் கருத்திருத்தியமைக்கு அரசாங்கத்துக்கு நன்றி செலுத்துவோமாக.

கல்வி எப்படி அமைய வேண்டும்.

1947-ல், உரிமை இந்தியா, கல்வி நெறியில் எந்த வகையில் செயலாற்ற வேண்டும் என நான் கனவுகண்டேன். அந்தக் கனவின் பயனாக நான் எழுதிய நூலே 'இந்திய முதற் சட்டம்' என்பது. அதில் வெறும் ஏட்டுப் படிப்பினால்

பயனில்லையென்றும், அது தொழிற் கல்வியோடு தொடர்பு கொண்டாலன்றிச் சிறக்காது என்றும், அத்துடன் சமுதாயத் தொண்டும் இடம் பெற்றால்தான் பட்டப்படிப்பு நிறைவுற்றதாகும் என்றும் விளக்கி, அதை ஒரு நாடகமாகவே ஆக்கித் தந்தேன். பல பள்ளிகள் அந்நாடகத்தை நடித்தன. அன்றைய தமிழகப் பொதுப் பணி அமைச்சராக இருந்த உயர்திரு மீ பக்தவத்சலம் அவர்கள் அதைப் பாராட்டி நல்லதொரு முன்னுரையும் தந்தனர். ஆயினும் அந்த நாடகம் 'நாடக' அளவிலேயே நின்று விட்டது. நாட்டில் அக்கொள்கையை யாரும் ஆதரிக்க வில்லை; அரசாங்கமும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் இத்தனை ஆண்டுகள் கழித்தாயினும் அத்தொழில் கல்வியும் சமுதாயத் தொண்டும் கல்வியோடு இணைக்கப் பெறுவ தறிந்து மகிழ்கின்றேன். தற்போது பட்டப் படிப்பு முடித்த பின் கிராமத் தொண்டும் பட்டம் பெறச் சேர்க்கப் பெறு கின்றது மகிழ்ச்சிக்குரியது. என் நாடகத்தின் அடிப் படையே (1947-ல் எழுதியது) அது தான்.

இன்று இந்திய நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையில் கல்வி முறை அமைந்துள்ளது. கல்வி மாநில ஆட்சிக்கு உட்பட்ட பொருளாக அமைகின்ற மையின் ஒவ்வொரு மாநிலமும் தத்தமக்கெனத் தனியாகக் கல்விக் கொள்கையை அமைத்துக் கொள்கிறது. இந்திய நாட்டு ஒருமைப் பாட்டுக்கு இந்த நிலை உகந்ததாகாது. ஏன் இதுவும் மத்திய அரசாங்கப் பொருளாக மாற்றப் படக் கூடாது? என்பதே பலர் கேள்வி. அனைத்திந்தியா வுக்கும் ஒரே கொள்கை அளவில் — பாடங்கள் அமைப் பதோடு, மொழி பற்றி மட்டும் அவ்வம் மாநில மொழி அடிப்படையில் அமைக்க ஏற்பாடு செய்தால் நலம் பயப்ப காதா? கணக்கோ, அறிவியலோ, சமூக நூலோ, வரலாறோ, தொழில் பாடமோ, உடற் பயிற்சியோ, வேறு உள்ள பாடங்

களோ அனைத்தும் நாட்டுப் பகுதிகள் அனைத்துக்கும் ஒன் றுகத்தானே அமையும். கீழ் வகுப்புக்களில் (5-ஆம் வகுப் பிற்குக் கீழ்) வேண்டுமாயின் நில நூல், வரலாறு போன்றவை அவ்வம் மாநில, மாவட்ட அடிப்படைகளில் அமையலாம். ஆனால் அவற்றிற்கும் பொதுவான அமைப்பு முறையை அனைத்திந்திய அடிப்படையில் அமைக்கலாம். மேல் வகுப்புக்களில் எல்லாவற்றிற்கும் ஒரே வகையில் பாடத்திட்டத்தினை அமைத்து அவற்றை ஆங்கிலம் அல்லது வட்டார மொழிகளில் (இந்தி உட்பட) வெளி யிட ஏற்பாடு செய்யின் நாட்டு ஒருமைப்பாடு உரு வாகாதா ? அத்துடன் எவ்வளவு பணச் செலவும் பிற செலவுகளும் குறைந்து வீண் விரயம் நீங்கும்! மேலும் தனி மாநிலம் மனம்போன போக்கிலே பாடங்களை வகுத்தும், கட்சிப் பிரசாரத்துக்கென்று பாட நூல்களை ஆக்கியும் செயல்பட, பிறகு அதைக் களைய ஒரு உட் குழுவை நியமிக்கும் தேவையும் இல்லையாகுமே.

மொழி அமைப்பிலும் ஒரு வரையறுத்த திட்டம் நாட்டில் இல்லை. சுமார் கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு பாடத் திட்டத்தின் மொழி மாற்றத்தால் எங்கோ பின் தங்கி விட்டது என இன்று பலர் கூக்குரலிடுகின்றனர். ஏன் இந்த அவல நிலை? இங்கே தமிழும் வளரவில்லை; இந்தியும் இடம்பெறவில்லை, ஆங்கிலத்தின் தரமோ அடிப் படையில் அமிழ்ந்து விட்டது. இது உண்மையென்பதைத் தமிழ்நாட்டில், அரசாங்கப் பள்ளிகளும் மானியம் பெறும் இலவசப் பள்ளிகளும் பல இருக்க, தனியார் தம் ஆங்கிலப் பள்ளிகள் அளவற்று வளர்கின்ற ஒன்றே எடுத்துக் காட்டுமே. நல்லவேளை இப்போதாவது மத்திய அரசாங்கம், தன் ஹையர் செக்கண்டரி போர்டின் துணையால், தமிழ் நாட்டில் பல பள்ளிகளை நிறுவ முன் வந்திருப்பது மகிழ்ச் சியதாக அமைகின்றது. இன்னும் சில ஆண்டுகளில் தமிழ்

நாட்டில் இப்பள்ளிகளின் எண்ணிக்கை ஆயிரத்தை ஏட்டும் அளவிற்கு வளரும் என அஞ்சுகிறேன். தமிழ் நாட்டுக் கல்விக் கொள்கையின் மாறுபட்ட தரமே இவை வளர வாய்ப்பீனை அளித்தது. இனியாவது இந்த முறை மாற வேண்டும். அண்மைத் திருத்தத்தால் இணைந்த பொறுப்பில் கல்வி விடப்பட்டுள்ளது. தற்போது, மாறத்தக்க சூழ்நிலை, நல்ல கல்வி நெறியாளரின் கீழ் உருவாவது மகிழ்ச்சிக்குரியது. இன்றேல் கல்வி அணைத்திந்திய அரசின் கீழ் கொண்டு செல்லும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப் பெற வாய்ப்பு உண்டாகும்.

மொழிப்பாடத்திலும் ஒன்றை நாம் காண வேண்டும். தமிழ் நாட்டு அரசாங்கம் தமிழுக்கு எந்த ஏற்றமும் இது வரையில் செய்யவில்லை. ஒரே முறை திரு. அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ் கட்டாயமாக்கப் பெற்றது. யாதொரு மாறு பாடோ எதிர்ப்போ இன்றி அன்று நாடு முழுவதும் அதை ஏற்றுக் கொண்டது. ஆயினும் அடுத்து வந்த கல்வி அமைச்சரால் அது இல்லாது, தமிழ்நாட்டில் தமிழ் பிற பதி னொன்று அல்லது லத்தீன், பிரஞ்சு, ஜெர்மன் மொழிகளோடு ஒன்றுக அமைக்கப் பெறப் பாடதிட்டம் அமைக்கப் பெற்றது. கல்லூரிக் கல்வியும் அந்த வகையிலேயே அமைந்தது. தமிழ் முதல் பகுதி (I Part) என்று பெயர் பெற்றதே ஒழிய, அது பிற மொழிகளோடு ஒன்றுகவே உள்ளது. ஆங்கிலம் இரண்டாவது இடம் (II Part) பெற்றாலும் அது அனைவராலும் கட்டாயமாகப் படிக்கப் பெறல் வேண்டும். இந்த அவல நிலை தமிழால் வாழ்ந்து வளர்ந்தவர் என்பார் காலத்திலும் மாறவில்லை. 'இருந் தமிழே உன்னால் இருந்தேன்' என்று தமிழ் விடுதூது ஆசிரியர் பாடியபடி, தமிழைக் காட்டித் தமிழால் தம்மை வளர்த்துக் கொண்டவர்கள் கூட, 'இருந்தமிழே உனக்காக

இருந்தேன்' என்று தமிழுக்கு ஒன்றும் செய்யவில்லை. கல்வித்துறை மட்டுமன்றி வேறு எத்துறைக்கும் இது பொருந்தும். எனினும் நான் இங்கே இந்தத் துறையின் அளவோடு நிற்கின்றேன்.

தமிழ் நாட்டில் தமிழ் கட்டாயம் இல்லை. கல்லூரிகளில் பிரஞ்சு பயில்கின்றவர் எண்ணிக்கை வளர்கின்றது. ஆனால் மராட்டிய மாநிலப் பள்ளிகளில் மாராத்தி கட்டாயப் பாடமாக உள்ளது. அந்நிய மாநிலத்தினராகிய எந்த மொழியாளரும் இந்திக்கு முன் மராத்தியைக் கட்டாயம் பயின்றாக வேண்டும். இப்படி வேறு எந்தெந்த மாநிலங்களில் உள்ளதோ யானறியேன் ஏன் இந்த வேறுபாடு? இப்படியே பாடத் திட்டத்திலும் பல ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. ஒரு மாநிலத்தில் ஆறாம்வகுப்பிற்கு அமைந்த பாடத்திட்டம் மற்றொன்றில் எட்டாம் வகுப்பிற்குக் கூட இல்லை. இப்படிப் பலப்பல வேறுபாடுகள். இந்த வேறுபாடுகளெல்லாம் நீங்க வேண்டியே அனைத்திந்தியாவுக்கும் ஒரே அடிப்படையில் கல்வித் திட்டத்தை வகுக்க முனைகின்றனர். அதுவே 10 + 2 + 3 என்னும் பகுப்புத் திட்டமாகும்.

இந்திய நாட்டில் ஒரு சில மாநிலங்கள் இந்தத் திட்டத்தை முன்னரே செயலாக்கியுள்ளன; சில செயற்குழுக்களையும் தனி அலுவலர்களையும் நியமித்து செயற்படத் தொடங்குகின்றன. சில இன்னும் கவலையற்ற உறக்கத்தில் உள்ளன. என்னைக் கேட்டால் இந்திய ஆளுநர் அவர்கள் ஒரு தனிச் சட்டத்தினால் (Ordinance) 1978 ஆண்டுக்குள் அனைத்து மாநிலங்களும் ஒரு வரையறுத்த நல்லதிட்டத்தில் செயல்படத் தொடங்க வேண்டும் என்று ஆணையிட வேண்டும் எனக் கூறுவேன்.

கல்வியியின் பகுபாடு

மேலே '10 + 2 + 3' என்ற ஒருமுறை நாட்டில் புகுத்தப் பெறுகின்றமை கண்டோம். 5 வயது முடியும் வரை

குழந்தைப்பள்ளியிலும் 15வயது வரையில் பள்ளியிலும் பிறகு இரண்டாண்டுகள் இடைநிலை நெறியிலும் பிறகு மூன்றாண்டுகள் கல்லூரியிலும் பயின்று 20 வயதில் சமுதாயத்தில் நுழையத்தக்க தகுதியினையும் வாய்ப்பினையும் பெறவேண்டும் என்பதே இதன் அடிப்படை. நோக்கம்.

ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வி என்பது தனித்த பிரிவாகவே எல்லா மாநிலங்களிலும் இயங்குகின்றது. அதை வளர்க்க அரசாங்கங்கள் பலவகையால் பாடுபடுகின்றன. மதிய உணவு முதல் இலவச நூல் வழங்குவது ஈறுகப் பலவகையில் உதவி செய்ய முன் வருகின்றன. கட்டாயக் கல்விமுறையில் செயலாற்றும் வகையும் ஆராயப் பெறுகிறது. எனினும், நாட்டில் கல்விக் கூடங்கள் வளர்கின்றன என்றாலும், போதிய அளவுபெறும் நிலையோ கல்வியின் தரமோ, அமைப்பு முறையோ நாட்டின் தேவைக்கு ஏற்ப வளரவில்லை என்பது கண்கூடு. ஆரம்பக் கல்வி எப்படி அமையவேண்டும் என்பது பற்றி எத்தனையோ ஆய்வுகள் நடைபெற்றும் அவை செயல்படத் தொடங்க வில்லை. அந்தத் தொடக்க நிலையிலேயே பிள்ளைகள் கல்வியுடன் அவரவர்தம் சூழலுக்கும் வாழ்வுக்கும் ஏற்ற வகையில் தொழில் கல்வி முதலியன அமைத்துத் திட்டமாக்கி, அவரவர் சுழலுக்கு ஏற்றவகையில் பாடத் திட்டங்களை அமைக்க வேண்டும். அவற்றைப் பயிற்றுகின்ற ஆசிரியர்கள் அத்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக அமைதல் சிறப்புடைத்து. ஆயினும் இந்த ஆரம்ப வகுப்புகளுக்கு இன்று மாநில முழுவதற்கும் ஒரே வகையான பாடத் திட்டத்தை யமைத்து, ஒரே வகையில் பயிற்சி பெற்ற பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களை உண்டாக்கி, (மேல் வகுப்புகளுக்கு பல பாடங்கள் ஒரே அமைப்பில் இருக்க வேண்டும் எனக்

பள்ளியில் பயிலச் செல்லும் சிறுவன் 5-ம் ஆண்டு தொடங்கிப் பத்து ஆண்டுகள் இடையீடின்றிப் படித்து முடிக்க வேண்டும். மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான 'எண்ணும் எழுத்தும்' அவன் கண்ணெனப் போற்றிக் கற்கத் தக்க, இன்றியமையாத, வாழ்வின் தேவைக்கான பொதுக் கல்வி அனைத்தும் அவனுக்கு அந்தப் பத்து ஆண்டுகளில் தரப்பெறும். அதுவரை யாருக்கும் எந்த வேறுபாடும் இல்லாமல், எல்லோரும் ஒரே வகையான கல்வியைக் கற்கத் தக்க வகையில் பாடங்கள் அமைகின்றன. இந்தப் பத்தாம் வகுப்பின் எல்லையே பலருக்கு வாழ்வின் மைல் கல்லாக அமைகின்றது. அங்கிருந்து — அந்த மைல்கல் எல்லையிலிருந்து பல்வேறு பாதைகள் பிரிகின்றன. ஒவ்வொரு பாதையும் ஒவ்வொரு துறைக்கு — சமுதாயத்தின் தேவையான துறைக்கு — பயில்வோரை பற்றிச் செல்லும் வழி காட்டியாக அமைகின்றது. அந்தப் பாதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இலட்சிய பூமியை நோக்கி — குறிக்கோளை அடைவிக்கும் துறை நிலைக்குப் பற்றி அழைத்துச் செல்லுகின்றது. முதல் மைல் கல்லுக்கும் இந்த இன்றியமையாத்துறை நிலைக்கும் இடையில் அமைந்த பாதையே 'இடைநிலை' எனப் பெறுகின்றது.

10+2+3 என்ற முறை கல்லூரிப் பட்டப் படிப்புக்கு என அமையிலும் பிற தொழிற்கல்வி முதலியவற்றிற்கும், அவ்வவற்றின் கால எல்லையே கணக்கிடப்பெறும். 10+2+3 என்ற வகையில் முதல் பத்து, பள்ளியில் கழிய பின் மூன்று கல்லூரியில் கழிய இடையில் உள்ள இரண்டு எங்கே நிற்பது என்ற வினாவே இன்று பல ருடைய உள்ளத்தைப் பற்றி நிற்கின்றது. இடையிலுள்ளது இடையே தனியாக நின்று வழிகாட்ட வேண்டும். ஆயினும் பலர் அதை உயர்நிலைப் பள்ளியோடு இணைக்க

வேண்டும் என்வும் சிலர் கல்லூரியோடு இணைக்க வேண்டும் எனவும் வாதிடுவர். பழைய காலத்தில் இடை நிலை வகுப்பு, கல்லூரியில் இருந்ததையும் சுட்டிக் காட்டுவர். ஆயினும் அந்த வகுப்பின் நிலைக்கும் இன்றைய இரண்டாண்டு கல்வி நிலைக்கும் வேறுபாடு உண்டு என்பதை உணர மறுக்கின்றனர். வெறும் ஏட்டுக் கல்வியாக மட்டும் இது அமையுமாயின் எங்கிருந்தாலும் யாருக்கும் கவலை இல்லை. இவற்றைப் படித்தோ படிக்காமலோ பட்டம் வாங்கித் தெருவு தோறும் திரிந்தலையும் பட்டதாரிகளைப் படைக்கும் ஒரு கருவியாகக் கல்விக் கூடம் அமைய வேண்டும் என்ற நிலை நீடிக்க வேண்டுமாயின் அப்படியே செய்யலாம். ஆனால் இந்திய அரசாங்கம் அந்தப் பழைய பயனற்ற முறையை மாற்றத்தானே புதிய திட்டத்தைப் புகுத்துகின்றது. எனவே இதன் பாதை தனியானது — பயனும் சமுதாயத்துக்குத் தேவையானது. எனவே இது தனித்தியங்கத் தக்கதே. வேண்டுமாயின் நல்ல தரம் வாய்ந்த மாநிலப் பள்ளிகளோ — அத்தகைய மத்திய கல்விக் குழுவின் எல்லைக் குட்பட்ட பள்ளிகளோ — தனித்த முறையில் பிற வகுப்புகளுடன் இந்த இரண்டாண்டுக் கல்வியினைப் பயிலுமிடமாக அமையலாம். அதுவும் தனித்த முறையில்— பத்தாண்டுக் கல்விக்குத் தொடர்பில்லா வகையில் தனித்து நின்று செயலாற்றும் வகையில் அமைய வேண்டும்.

இந்த இரண்டாண்டுக் கல்வி முறை பற்றித் திட்டமான பாடங்களை மத்திய அரசாங்கம் அமைக்க முயன்று வருகிறது. பல்வேறு குழுக்களை அமைத்து அவற்றின் வழியே அத்திட்டத்தின் அடிப் படையினையும் அமைய வேண்டிய பாடங்களின் வகை, முறை ஆகியவற்றையும் ஆராயத் தொடங்கியுள்ளனர். தமிழகத்தில் அதற்கெனத் தேர்ந்தெடுக்கப் பெற்ற கல்வி அலுவலர், இன்று பள்ளிக்

கல்வியின் துறையுடன் இதன் அமைப்பிலேயும் அக்கறை காட்டி உழைத்து வருகின்றமை போற்றற்குரியது. எனினும் தமிழ்நாட்டு அரசாங்கம் அதற்கெனத் திட்டமான வரையரைகளைச் செய்து முடிக்கவில்லை. விரைவில் செயல்பட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இந்திய நாட்டில் இன்றைய நிலையில் பல மாநிலங்கள் இத் திட்டத்தை இன்னும் செயல்படுத்த முனையவில்லை. நாட்டில் மாநிலங்கள், மத்திய அரசுக்குட்பட்ட எல்லைகள் ஆகியவை 30 உள்ளன. அவற்றுள் முதல் பத்தாண்டுத் திட்டம் 17 இடங்களிலேயே உள்ளன. ஆந்திரம், கருநாடகம், கேரளம் போன்ற தென் மாநிலங்களும் மராட்டியமும், அசாம், குஜராத், வங்காளம் போன்ற வட மாநிலங்களும், ஜம்மு காஷ்மீரமும் 10 ஆண்டுக் கல்வியைச் செயல் முறையில் முன்பே கொண்டு வந்ததோடு, அடுத்த இடைநிலைக்கான இரண்டாண்டுக் கல்வியினையும் வரையறுத்துள்ளன. எனினும் அவை அனைத்திந்திய எல்லையில் — அமைப்பில் இயங்க வில்லையாதலின் பலப்பல குறைபாடுகள் உடையனவாக உள்ளன. மராட்டிய மாநிலத்தில் குற்றங்கள் சுட்டிக் காட்டப்பெறுகின்றன. இதற்கெல்லாம் மத்திய அரசாங்கம் உடனடியான தீர்வு காண வேண்டியது கடமையாகும்.

தில்லி உயர் பள்ளி கல்விக் குழுவின் தலைவர் அவர்கள் அவ்வப்போது தாம் செய்ய இருக்கும் மாற்றங்கள் பற்றிப் பத்திரிகைகளுக்குச் செய்தி விடுத்து வருகிறார். தில்லி உட்பட அதன் கீழ் இயக்கும் நாட்டில் உள்ள சுமார் ஆயிரம் பள்ளிகளிலும் 10 வகுப்பு வரை வரையறுக்கும் திட்டம் சென்ற ஆண்டிலேயே அமுலுக்கு வந்து விட்டது. 1977-ல் அப்பள்ளிகள் 10:ம் வகுப்பினை முடிக்கின்றன. எனவே 1977-சூலையில் இடைநிலை வகுப்புக்கள் உருவாகி வளர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

இந்த இரண்டு ஆண்டுகள் எப்படி அமைய வேண்டும் என்பதை இன்னும் அவர்கள் திட்டமாக முடிவு செய்ய வில்லை. விரைவில் முடிவினை எதிர் பார்க்கலாம்.

கல்வி, சமுதாயத்துக்கு ஏற்ற வகையில், சமுதாயத்தை வாழ வைக்க வேண்டிய நிலையில் அமைய வேண்டும் என்ற கருத்தில் யாருக்கும் வேறுபாடு இல்லை. ஆயினும் அதை அணுகும் முறையில் வேறுபட்ட கருத்துக்கள் உருவாகின்றன. 'கோத்தாரி கமிஷன்' கல்வி, திட்டமாகச் சமுதாய அமைப்புக்கு ஏற்ற வகையில் அமைய வேண்டும் என வற்புறுத்தியுள்ளது. அதை மனதில் கொண்டே இன்றைய இந்திய நாட்டுக் கல்வி அமைச்சர் அவர்களும் பல அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். பல்வேறு இடங்களில் பலப்பல கூட்டங்களும் ஆய்வு பற்றி அமைகின்றன. எனினும் திட்டமான முடிவு எடுக்கக் காலதாமதம் ஆகின்றது, ஏன் ?

சிலர் தற்போதுள்ள நிலையில் மாற்றம் காண விரும்பவில்லை. சிலர் தங்கள் பதவி போய் விடுமோ எனக் கூக்குரல் இடுகின்றனர். சிலர் தாங்கள் உயர வேண்டும் என மறைமுகமாக உழைக்கின்றனர். காய்தல் உவத்தல் அகற்றி இதுபற்றி ஆராயின் உண்மை நன்கு புலனாகும். முதலில் **இந்த இடை நிலை வகுப்பு எங்கே இருக்க வேண்டும் என்பது முடிவு செய்யப் பெறல் வேண்டும்.** சில மாநிலங்கள் முன்னரே முடிவு செய்துள்ளன; தனியாக இளங் கல்லூரிகள் (Junior Caollges) அமைத்துள்ளன. உடன் சில தரமான உயர் நிலைப் பள்ளிகளை உயர்த்தி அவற்றுடன் இந்த இருவகுப்புக்களையும் இணைத்துள்ளன. தமிழ்நாட்டிலேயேயும் நானூறு உயர்நிலைப் பள்ளிகளை உயர்த்தத் திட்டம் தீட்டியுள்ளதாக அறிகிறேன். மத்திய உயர் பள்ளிக் கல்விக்குழுவும் தன் ஆணையின் கீழ் உள்ள பள்ளிகள் பலவற்றை உயர்த்தத் திட்டமிட்டிருப்பதாக

அறிகிறேன். 1958ல் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புத் தொடங்கப் பெற்ற காலத்தில் அது உயர்நிலைப் பள்ளியோடு இணைக்கப் பெற வேண்டும் என்ற அடிப்படையிலேயே ஆரம்பிக்கப் பெற்றது. 1955ல் நியமிக்கப் பெற்ற மத்திய கல்விக்குழு செய்த சிபாரிசின் அடிப்படை இந்த உண்மையை விளக்கும். எட்டு ஆண்டுகள் ஆரம்பக் கல்வி, பின் மூன்று ஆண்டுகள் பள்ளிக்கல்வி, பின் 3 ஆண்டுகள் கல்லூரிக் கல்வி என்ற அடிப்படையே அமைக்கப்பெற்றது. இடையிலே உள்ள பள்ளிக் கல்வி இருவகையாக்கப் பெறல் வேண்டும் எனவும் முடிவு செய்யப் பெற்றது. ஒன்று - முக்கியமானது - பயிலுபவர் வாழ்வுக் கல்வியை (Vocational) பயின்று சமுதாயத்தில் உள்ள பல்வேறு வாழ்வுத் துறையில் புக வாய்ப்பினை பெற்றவராக வேண்டும் என்பது. மற்றது வெறும் கல்வி பயிலுவதற்கெனவே - உயர் பட்டம் பெறுவதற்கெனவே - கலை கலைக்காக அறிவு பெருக்கிக் கொள்வதற்கெனவே - கல்லூரியில் சேர வழி வகுக்கும் நிலையில் அமைவது. இவை பற்றிப் பின்னே விரிவாகக் காண்போம்.

தமிழ்நாட்டில் கல்வித் துறையின் உயர் அலுவலர் சிலர் அண்மையில் கூடி, இந்த இடைநிலை வகுப்பு, கல்லூரிகளிலிருந்து பிரிக்கப் பெற வேண்டும் என முடிவு செய்துள்ளமை வரவேற்கத் தக்கதே. கோத்தாரி கமிஷனின் திட்டமான முடிவும் அதுவாகும். உண்மையில் கல்லூரிகளில் இன்று காணும் வெறும் ஏட்டுப்படிப்பு என்ற நிலைமாறி, நாட்டுக்குத் தேவையான கல்வி வளர வேண்டுமாயின் இதைத் தனியாகப் பிரிக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளியோடு இணைத்தலும் அத்துணைப் பொருத்தமானதாகாது. புதிய திட்டப்படி 10ம் வகுப்பு வரையில் எல்லாப் பாடங்களுடன் தொழிற்கல்வி முதலியனவும் கட்டாயமாகப் பயிற்றப் பெறுகின்றன. ஆனல் இந்த

இரண்டு ஆண்டுகளின் கல்வி அமைப்பு அத்தகைய தன்று. நாடு நலம் பெற வேண்டுமாயின் அத்தகையதாக இருக்கவும் கூடாது. இங்கே மொழிகளுக்கு ஓரளவு இடம் அளித்து, பிறவற்றைப் பல்வேறு கால்வாய்களாகப் பிரித்து, மாணவர் களை வாழ்க்கைத் தொடர்புடைய கல்வித்துறைகளில் ஆற்றுப்படுத்த வேண்டும். வாழ்வில் எத்தனை வகையான துறைகள் உண்டோ அத்தனைக்கும் வழிவகுக்கும் நடுநிலைப் பேரேரியாக இது இயங்க வேண்டும். ஒன்றினைச் சான்றாகக் காணலாம். இன்று சாதாரண அரசாங்க எழுத்தாளர் வேலைக்குத் தேர்வு நடத்தும் குழுவினருக்கு 'எம். ஏ' பட்டாதாரிகளும் விண்ணப்பமிட்டுத் தேர்வு எழுதி அதன் அடிப்படையில் எழுத்தர் பதவி (Lower division clerk) பெறுகின்றனர். அவர் 'எம். ஏ' பட்டம் பெற ஆறு ஆண்டுகள் கல்லூரியில் பயின்றவர். பிற்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினராயின் அவருக்கு அரசாங்க மானியம் அதிகமாக வழங்கப் பெற்றிருக்கும். இல்லையாயின் அவருக்குச் செலவும் அதிகமாகும். தனியார் முதலீடும் கல்வி நிறுவனங்கள் வழியும் வேறு வகையிலும் அரசாங்க முதலீடும் கணக்கிடின் ஒருவருக்குப் பல ஆயிரங்கள் (எம். ஏ. பட்டம் பெற) செலவு செய்யப் பெற்றிருக்கும், அவருக்கும் அவர் வாழ்நாளில் ஆறு ஆண்டுகள் வீணைகக் கழிந்தொழிந்தது. இந்த நிலையில் 10ம் வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவருடன் போட்டியிட்டு சாதாரண எழுத்தர் பதவிக்கு இவர் போவாராயின் அந்த நாளும் பொருளும் செலவழிந்ததால் யாருக்குப் பயன்? இவ்வாறு ஆயிரக் கணக்கான மாணவர்களுக்குப் பலகோடி ரூபாய்களை அரசாங்கம் செலவு செய்தும், வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகி விட்டது. 'வேலை கொடு பட்டம் வேண்டாம்' என்று பட்டமளிப்பு விழாவிலேயே அப்பட்டம் பெறுபவரே கூச்சலிடும் நிலையும் உண்டாகி விட்டது.

எனவே இன்றைய படிப்பில் உள்ள கோளாறுகள் பல வற்றை விளக்குவதற்கு இது ஒன்றே சான்று. இத்தகைய முறைகளையும் குறைகளையும் தவிர்ப்பதற்கெனவே புதிய இடைநிலை வகுப்பில் வழித்துறை காணல் இன்றியமையாத தாகின்றது. இன்று இடைநிலை வகுப்பினை நடத்தும் சில மாநிலங்களிலும் இந்தப் பெருமுன்னேக்கு (future vision) காணப்படவில்லை. இந்திய அரசாங்கம் இதற்கெனத் தனித்த ஏற்பாட்டினைச் செய்து நாடு முழுதும் ஒருவகை யான திட்டத்தை அமைக்க வழிகாண வேண்டும். 'கல்வி' மாநில மைய அரசாங்கங்களின் இணைப் பொறுப்பில் வந்து விட்டமையின் இரு அரசாங்கங்களும் இது பற்றி எண்ணி உடனே செயலாற்ற வேண்டும். இந்த இடைநிலை வகுப்பின் மாணவர் வருங்காலத் தம் வாழ்வை வகுத்துக் கொள்ளும் வகையில் பாடங்கள் அமைய வேண்டும். அண்மையின் மத்திய உயர்பள்ளிக் கல்விக் குழுவின் தலைவர் அறிக்கை ஒன்று கலப்புக் கல்வி முறையை - தற்போது உள்ளதை ஒத்து - வழங்க நினைப்பதாகக் குறிக்கின்றது. (4-6-76 Indian Express report) ஆயினும் அவர்கள் இதற்குமுன் எழுதிய அனைத்தும் இந்த இடைக்காலக் கல்வியின் நிலை பற்றித் திட்டமாக விளக்குகின்றன. நான் முன்னே குறித்த படி, சில சுயநலவாதிகள் தம் நலம் கருதி இதைத் தவிர்க்கவோ அன்றித் தடுக்கவோ அன்றித் திரிக்கவோ முயல்கின்றனர். அரசாங்கமும் மேலே உள்ள உயர் அதிகாரிகளும் அவர்தம் சூழலுக்கு உள்ளாகாமல் நாட்டுக் குத் தேவையான நல்ல முறையினையே இக்கல்வி நெறியில் புகுத்தல் வேண்டும்,

இந்த இடைநிலை வகுப்பு எங்கே இருக்க வேண்டும் என்பதை விடுத்து வேறு எங்கோ சென்றோம். இந்த வகுப்பு, உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் இணைக்கக் கூடாத ஒன்று. இதன் முறையே தனித்தன்மை வாய்ந்தது.

அனைவருக்கும் பொதுவான கல்வி அனைத்தையும் கற்பிக்கின்ற பள்ளியின் நிலைக்கும் தனித்த ஆய்வு அல்லது உயர்கல்வி முறையில் அமைகின்ற கல்லூரி முறைக்கும் இடையில் அமைந்த இக்கல்வி நன்கு பரிசீலனை செய்யப் பெறல் வேண்டும். எனவே இது ஒரு தனி 'போர்டின்' கீழ் தக்க துணைக்குழுவுடன் அமைக்கப் பெற வேண்டுவதாகும். இதில் வேறுபாடான கருத்து இருக்கக் காரணமில்லை.

இந்த வகையால் உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டும் கல்லூரியில் ஓராண்டும் (இரு ஆண்டுகள்) நீக்கப் பெற வேண்டியுள்ளமையின் பலருக்கு வேலை நீக்கம் உண்டாகும் எனச் சிலர் கவல்வதாக அறிகிறேன். உண்மையில் அத்தகைய கலக்கத்துக்கு இடமே இல்லை. இந்தப் புதிய இடைநிலைக் கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் தேவையல்லவா! அப்பதவிகளுக்கு இந்த இரு இடங்களிலும் இடமற்றுப் போவோரை அமைத்துக் கொள்ளலாம் அல்லவா. எத்தனையோ உயர்நிலைப் பள்ளிகளில் எம். ஏ. எம். எஸ்சி பட்டம் பெற்றவர்கள் இரு ஊதிய உயர்வு (two increments) பெற்று வாழ்கின்றனர். அவர்களையெல்லாம் - இந்தக் கல்லூரிகளுக்கு ஏற்பத் தனி முறையில் சம்பளத் திட்டம் வகுத்து - ஏற்றுக் கொள்ளலாம் அப்படியே கல்லூரியில் கடை நிலையில் உள்ளோரை இந்தக் கல்லூரிகளுக்கு ஏற்றுக் கொள்ளலாம். பல கல்லூரிகளில் வரையறுத்த தரம் குறைந்த நிலையில் உள்ளவர்களும் தகுதியற்றவர்களும் ஆசிரியர்களாக உள்ளமை அறிவோம். முதுநிலை பயின்று அதில் இரண்டாம் வகுப்பில் (50%) தேர்ச்சி பெற்றவரே கல்லூரிகளில் ஆசிரியர்களாக வர வேண்டும் என்ற விதியிருந்தும் - அரசாங்கக் கல்லூரிகளில் அத்தகையோர் நியமிக்கப் பெற்று இருக்கும் நிலையிலும், பல தனியார் கல்லூரிகளில் தகுதியற்றும் தரம் குறைந்தும் நின்றவர் பலவழிகளில் நுழைந்து பணியாற்றுவ தறிகின்

மேம். அவர்களைக் கல்லூரியிலிருந்து நிக்கவும் செய்யலாம்; அன்றி இடைநிலைக் கல்லூரிக்கு ஏற்புடைத்தாயின் இங்கே அமைத்துக் கொள்ளலாம். இன்று ஓய்வு ஊதியம் உட்பட எல்லா வகையிலும் தனியார் நிறுவனங்களில் உள்ள ஆசிரியர் அனைவருக்கும் அரசாங்கத் துறையில் பணியாற்று ஆசிரியர்களைப் போன்றே எல்லாச் சலுகைகளையும் தருவ தால் பதவிகளுக்கு ஒரே வகையான விதிமுறைகளை அமைத்தல் சாலும். எனவே இந்த 'வேலை இழப்பு' என்ற பிரச்சினைக்கே இங்கு இடமில்லை. அரசாங்க மானியம் இன்றேனும் தமக்கு வேண்டியவர்களைத் தரம் குறைவார் இருந்தும் பணியில் அமர்த்திக் கொள்ளும் சில தனியார் கல்லூரிகளில் உள்ள அவலநிலைக் கொடுமையும் நீங்கும்.

தற்போதுள்ள கல்லூரிகளில் பல போதிய மாணவர் இல்லாமல் வாழ்வுக்கு ஊசலாடுகின்றன. பல கல்லூரிகளில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் உரிய நாளில் வழங்கப் பெற வில்லை என்பதை நாளிதழ்கள் நமக்குக் காட்டுகின்றன. அரசாங்கமும் ஒன்றும் செய்ய முடியாது திகைப்பதை அறிகிறோம். எனவே அத்தகைய கல்லூரிகளையெல்லாம் இடைநிலைக் கல்லூரிகளாக மாற்றின் இந்தச் சிக்கல் நீங்கும். மூன்றாண்டிலும் பட்டப் படிப்புகளில் மாணவர் 200க்குக் குறைவாக உள்ள கல்லூரிகளை இந்த வகையில் மாற்றப் பல்கலைக் கழகங்களும் அரசாங்கமும் எண்ணிக் கொண்டி ருப்பதாக அறிகிறேன். அது உண்மையில் செயலாக்கப் பெறுமாயின் வரவேற்கத்தக்கதே. இடைநிலை இரண் டாண்டுகளில் கூடுதலான எண்ணிக்கை இருக்கும் என்பது உறுதி. எனவே இந்தக் கல்லூரிகளின் 'திரிசங்கு சுவர்க்க' வாழ்வும் இல்லையாகி, நலம் உண்டாகும். இவற்றுலெல்லாம் இடைநிலை தனியாக இயங்குதலே சிறந்தது என அறிதல் வேண்டும். 1962 நடைபெற்ற பல்கலைக் கழகத் துணை வேந்தர், மத்திய உயர் கல்விக் குழுவினர் கூட்டத்திலும்

இந்த அடிப்படையே - 12 ஆண்டு பள்ளிக்கல்வி-3 ஆண்டு கல்லூரிக்கல்வி - வற்புறுத்தப் பெற்றுள்ளது. இங்கிலாந்து பிரான்சு ஜப்பான் முதலிய நாடுகளிலும் இந்த முறையே பின்பற்றப் பெறுவதாக அறிகிறோம். மேலும் அப்பள்ளிகளே வாழ்வுப் பணிகளுக்குப் பயிற்சி அளிக்கும் கூடங்களாக 1944 முதலிருந்தே இங்கிலாந்தில் செயற்பட்டு வருவதாக அறிகிறோம். இத்தகைய பள்ளிகள் பலவகையில் இயங்குவதையும் அறிகிறோம். மேலும் இங்கிலாந்தில் இளங்கல்லூரி (Junior Colleges) களாக இயங்கும் இடைநிலை வகுப்பினை உடையவையும் பலவகையில் பள்ளிகளொடே தொடர்பு கொண்டவையாக உள்ளனவேயன்றி, கல்லூரிகளோடு தொடர்பு உடையனவராக இல்லை எனவும் காண்கிறோம். அமெரிக்க நாட்டிலும் கல்விமுறை பிள்ளைகளைச் சமுதாய வாழ்வொடு பின்னிப்பிணைக்கும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய அடிப்படைக் காரணங்களாலும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நம் நாட்டில் அமைக்கப் பெற்ற கல்விக் குழுக்களின் முடிவுகளாலும் இந்த இடைநிலை தனி போர்டின் எல்லைக்கு உட்பட்டு, தனித்த வகையில் தேர்வு நடத்தி, சமுதாய வாழ்வொடு தன்னைப் பிணித்துக் கொண்டு இருப்பதே சரியான முறையாகும்.

இனி, இந்த இடைநிலை வகுப்பு அமைவதுபற்றி எண்ண வேண்டும். தற்போது செயல்பட்டு வரும் சில மாநிலங்களில் ஏதோ சில மாற்றங்கள் கொண்டு பெரும்பாலும் நூல் வழியே கற்கும் பாட அமைப்பே அமைந்துள்ளது. சில மாநிலங்களில் இரண்டாம் ஆண்டு இறுதியில் தேர்வும் சில மாநிலங்களில் ஒவ்வொராண்டிலும் தேர்வும் நடைபெறுகின்றன. தேர்வுகளிலும் பெரும் மாற்றம் இல்லை. எனவே இந்திய அரசாங்கம் எந்த அடிப்படையில் இக்கல்வித் திட்டத்தை மாற்ற வேண்டும் என

இந்த நூற்றாண்டின் தொடக்க முதல் விரும்புகிறதோ, அந்த நோக்கம் - அடிப்படை நிறைவுபெறவில்லை. மத்திய அரசு எல்லா மாநிலக் கல்வியாளரையும் கூட்டி உடன் ஒருமித்த நல்ல முடிவினை மேற்கொள்ள வழிவகுக்க வேண்டும்.

இந்தக் கல்வி முறை - இரண்டாண்டின் படிப்பு - நான் மேலே சுட்டிக் காட்டியபடி ஒரு பெரிய ஏரியாக அமைந்து, பலகால்வாய்கள் வழி ஓடி நாட்டை வளம்படுத்த வேண்டும். இன்று கல்லூரிகளில் உள்ள தேவை இல்லாத நெருக்கடி நீங்கவும் மாணவர் உண்மையான கல்வி கற்று உயர் நலம் பெறவும் வழி வகுக்க வேண்டும்.

புதிய பாடத்திட்டத்தினைப் பற்றிக் காணுமுன் அதற்கெனத் தேர்ந்தெடுக்கப் பெறும் ஆசிரியர்களைப் பற்றிச் சற்றே எண்ணக் கடமைப் பட்டிருக்கிறோம். அண்மையில் சென்னையில் நடைபெற்ற ஆசிரியர்கள் பயிற்சி பற்றிய கூட்டத்தில் நம் தமிழகக் கல்விச் செயலர் அவர்கள் கூறிய சொற்கள் என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. தனிப்பட்ட துறைகளென ஒதுக்கப் பெற்றவற்றிற்கெல்லாம் நான்கு, ஐந்து, ஆறு ஆண்டுகள் படிக்கும் நிலையில் வருங்காலச் சந்ததிகளையே உருவாக்கும் இந்த ஆசிரியத் துறைக்கு மட்டும் பத்துத் திங்களே பயிற்சிக் குரியதாக அமைந்துள்ள நிலை குறித்து அவர் வருந்துகிறார். வருங்காலக் கல்வி பயிற்றும் ஆசிரியர்கள் எப்படி அமைய வேண்டும் எனக் காட்டுகிறார்.[1]

---

1. A report on the speech by Tiru. C. G. Rangabashyam, Educational Secretary, Govt. of Tamilnadu as reported in The Hindu dated 23—11—76 (P-12)

Inaugurating a three-day regional workshop on teacher-education organised jointly by the Univer-

அப்படியே சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களும் 'கல்வி' பயிற்றும் நல்லாசிரியருக்குப் போதிய 'கல்வி' ஞானம் இல்லா நிலையைக் கண்டித்ததோடு, வெறும் பத்து மாதம் பயிற்சி போதாது எனவும், கல்வி பற்றிய பாடமே (On Education) முதுநிலை, இள நிலை

Foot - Note: Contd.

sity Grants Commission and the Madras University the Education Secretary said all educational reforms would be set at nought if the methods and manner of recruitment of teachers at different stages were not gone into in depth to avoid selection of candidates who were "rejects" in other fields. He pointed out that more often than not candidates joined the teaching profession as the last resort without a deep urge to communicate knowledge and learning. He felt brilliant students with splendid academic record turned to other professions while only the mediocres joined the teaching profession at various levels.

In this connection, he stressed the importance of primary school teachers and said it was at this level the real foundations of the academic edifice was laid. While the talk of lowering standards in education was gaining momentum, the fault was largely because educational reforms did not lay enough emphasis on teacher education which received a low priority and "unless teacher education was given special attention, there would be little improvement in standards", he said.

While the duration of any academic course was of vital importance particularly teacher training courses Mr. **Rangabashyam wondered why the B. Ed course lasted only ten months or so when other professional courses continued for about five years.** This was because "there is so much to learn but little is contained in the curriculam".

(M. A, B. A.) ஆகிய இரு வகுப்புகளிலும் இடம்பெற, அதைப் பயின்றபின் பயிற்சி பெற்றவரே ஆசிரியராகும் நிலை பெறவேண்டும் எனவும் சுட்டுகிறார்.[2]

உண்மையில் இவை எண்ணிப் பார்க்கத் தக்க கருத்துக்களாகும். இந்தப் புதிய இடைநிலை வகுப்பிலேயே இதற்கும் இடம் வகுக்கப் பெற வேண்டும். மேலும் மற்றொன்றை எண்ணிப் பார்ப்பின் இன்னும் நகைப்பிற் இடமாகும். பள்ளி ஆசிரியர்களாவது பத்துத் திங்கள் பயிற்சி பெறுகிறார்கள். கல்லூரி ஆசிரியர்கள்? எத்தகைய பயிற்சியும் இல்லாது, சென்ற ஆண்டு மாணவராக இருந்து, எப்படியோ தேர்ச்சி பெற்று முதுகலைப் பட்டம் பெற்றவர், அடுத்த ஆண்டு வேண்டியவர்கள் வழியிலோ அன்றி வேறு வழியிலோ கல்லூரியில் துணைப் பேராசிரியராக (Asst. Professor) நியமிக்கப் பெறுகிறார்கள். இத்தகையோருக்கு எந்தவிதமான பயிற்சியும் கிடையாது. கல்லூரி ஆசிரியர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் கூறியபடி 'B. A' 'M. A' வகுப்புக்களில் கல்வியைப்

---

2. A report on the speech by D. Malcolm Adiseshiah, Vice-chancellor, university of Madras as reported in The Hindu dated 23—11—76 (P-12).

He also suggested that the teacher-education should be separated from teacher-training courses and a candidate should be given the opportunity to decide at the appropriate stage whether he wished to become a teacher or a teacher trainer, Regretting that education had not yet been recognised as an academic discipline, Dr. Adiseshiah said it was time education was offered as a subject in the B.A. and M.A. course. "As we structure the new pattern for the final phase the three year stage-we should see that education emerges as a discipline," he said.

வாடமாக எடுத்தவர்களாகவும் குறைந்தது இரண்டாண்டுகள் பயிற்சி பெற்றவர்களாகவும் இருப்பின் நாட்டுக் கல்வியின் தரம் நிச்சயம் உயரும். இந்த நிலை இன்மையே நம் நாட்டுக் கல்வி—சிறப்பாக உச்சத்தில் இருந்த தமிழ் நாட்டுக் கல்வி— எங்கோ படுபாதாளத்தில் விழுந்துவிட்டது. நம் சென்னைப் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பிலும் உயர் பட்டப் படிப்பிலும் அடுத்த ஆண்டே கல்வி பற்றிய பாடத்தைப் புகுத்தி, உடன் செயல்படத் துவங்குமாறு பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இனி விட்டதைத் தொடுவோம். புதிய பாடத் திட்டம் சில மாநிலங்களில் ஏறக்குறைய பழைய முறையிலேதான் அமைந்திருக்கின்றது. 11 + 1 + 3 என்ற நிலை மாறி 10 + 2 + 3 என்ற நிலை பெயரளவிலோ அன்றி ஆண்டளவிலோ அமையலாகாது. மாற்றம் வேண்டி முயன்றவர் தம் சிந்தை அனைத்தும் வெறும் எண் மாற்றத்தில் அமையவில்லை. உண்மையிலேயே மாற்றம் நாட்டுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். பள்ளியிலோ கல்லூரிகளிலோ பயின்றவர்களுள் பெரும்பாலோர் தம் வாழ்வுக்கு ஏதேனும் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனேயே பயில்கின்றனர். மிக மிகச் சிலரே 'கல்வி கல்விக்காகவே' என்ற நோக்கோடு பயில்பவராக இருக்கலாம். பலர் உண்வு, உறையுள், சம்பளம் அனைத்தும் அரசாங்க மானியமாகக் கிடைப்பதால் பொழுது போக்குக்காகக் கற்கின்றனர். சில செல்வர்கள் அம்மானியங்களை, பொய்வழி காட்டிப் பெற்று, பெற்றோர்களுக்கும் தெரிவிக்காது, தம் சுகபோக வாழ்வுக்குச் செலவிடுகின்றனர். ஒரு சிலர் உண்மையிலேயே மானியமும் இன்றி வேறு வாய்ப்பும் வழியும் இன்றி வாடுகின்றனர். கடந்த நாற்பது ஆண்டுகளில் நான் பணியாற்றிய கல்வித்துறை கற்றுத் தந்த பாடங்கள்

இவை. அரசாங்கம் நாட்டு மக்கள் வாட்டம் போக்கவும் பின் தங்கிய வகுப்பார் பிறருடன் முன்னேற்றங் காணவும் வகுத்த இந்த நல்ல உதவித் திட்டங்கள் சிலரால் தத்தம் சுயநலத்துக்கெனப் பயன் படுத்தப் பெறுகின்றன. எனவே அரசாங்கங்கள் இந்த மானிய முறையை மாற்றி, உண்மையில் தகுதியும் தேவையும் உடையவர்கள் பயன்பெறத் தக்க திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசாங்கங்கள் இந்த வகையில் கோடிக் கணக்காகப் பணத்தைச் செலவு செய்கின்றன. பள்ளிக் கூடத்தில் ஒரு மாணவனுக்கு நூற்றுக் கணக்கில் என்றால் கல்லூரிகளில் ஆயிரக் கணக்கில் செலவாகின்றது. சிறப்பாக M. Sc. வேதியல் (Chemistry) பயிலும் ஒரு மாணவனுக்கு ஆகும் செலவு ஆண்டுக்குப் பத்தாயிரத்தையும் எட்டும். அவரவர் சொந்தப் பணமும் வேறு செலவாகலாம். இவ்வாறு பல ஆயிரக்கணக்கில் செலவாகும் நிலையில் படித்தவன் முடிவில் என்ன செய்கிறான்? இன்றைய நாட்டு நிலை இந்த வினாவிற்கு விடைதரும் நிலையில் உள்ளது. ஒரு செல்வத் தந்தையார் — உயர் பதவி வகிப்பவர் தன் பெண்ணை வேதியல் 'M. Sc.' யில் படிக்க வைக்க முயன்றார். தம் சார்பினாலும் பதவி வகையினாலும் எப்படியோ இடமும் பெற்றார். அதற்கு முதல் நாள் நான் அவரிடம் 'இப்படி ஏன் படிக்க வைக்கப் போகிறீர்கள்? இந்தப் பெண் எங்கும் வேலைக்குப் போகப் போவதில்லையே' என்றேன். அவர் என் கேள்விக்கு விடையாக' ஆமாம் — என்றாலும் பொழுது போகவில்லை. திருமணம் ஆகும் வரையில் படிக்கட்டுமே என நினைக்கிறேன். முயன்றால் இடம் கிடைப்பதும் அரிதில்லை' என்றார். அவர் சொன்னபடி மகளுக்கு இடமும் பெற்றார். இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் அவருக்காக 15000 ரூபாயாவது செலவு செய்திருக்கும். அவர்கள் சொந்

தப்பணமும் இரண்டு அல்லது மூன்றுயிரம் செலவாகி யிருக்கும். தேர்வு முடியுமுன் மணத்துக்கு நல்ல இடம் கிடைத்தது; தேர்வு முடிந்தபின் திருமணமும் நடை பெற்றது. தற்போது நல்ல குடும்பப் பெண்ணுக — குழந் தைகளுக்குத் தாயாகக் குடித்தனம் நடத்தி வருகிறார். அவருக்கெனச் செலவிட்ட அத்துணை ஆயிரமும் பொரு ளாதாரத்தின் சீர் குலைவுக்கு வழிதானே. இதே போன்று எத்தனை எத்தனையோ ஆயிரக் கணக்கான மாணவர்கள் அரசாங்கப் பணத்தையும் சொந்தப் பணத்தையும் வீணக் குகின்றனர்.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஓர் உயர் பதவியாளரிடம் ஒரு கிராமத்து உழவர் தன் மகனுக்கு 'எம். எஸ்சி'யில் இடம் வேண்டுமென்று கேட்டாராம். அதற்கு அவர், 'தக்க தகுதி பெறுத நிலையில் நீ எதற்குத் தொந்தரவு செய் கிறார்?' எனப் பதில் கேள்வி கேட்டாராம். உழவர் அமை தியாக 'இரண்டு ஆண்டுகள் என் மகன் சாப்பாட்டிற்குக் கஷ்டமில்லாமல் வீடுதியில் இருந்து உதவி பெறுவான்; மேலும் எனக்கு ஒரு பணச் செலவும் கிடையாது' என்று கூறினாராம். மேலும் 'எம். எஸ்சி' இல்லாவிட்டாலும் ஒரு 'எம். ஏ' வது கொடுத்து, இரண்டாண்டுகளுக்கு அவன் நன்கு சாப்பிட ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டாராம். இவ்வாறு பலர் பொழுது போக்குக்காகவும் உணவுக்காகவும் உயர் பட்டப் படிப்பைப் படிப்பது அவல மானதாகும். எந்த நாட்டிலும் இந்த அவலநிலை இல்லை என எண்ணுகிறேன்.

இன்னொரு வகையான மாணவர்களையும் இங்கே எண்ணக் கடமைப்பட்டிருக்கிறோம் அரசாங்கச் செலவி லும் தனிச் செலவிலும் ஆயிரக்கணக்கில் செலவிட்டு M. A, M. Sc பட்டம் பெற்று அரசாங்கத்தில் எழுத்தர் உத்தியோகத்திற்கு '(Lower division clerk) விண்ணப்பம்

போடுகின்றனர். தேர்வும் எழுதுகின்றனர். பாவம் - பள்ளிப் படிப்போடு (S. S. L. C) நின்ற, தேர்வும் எழுதும் மாணவர்களோடு இம்முதுகலைப் பட்டம் பெற்றவரும் போட்டியால் எழுதி, வெற்றியும் பெற்றுச் சாதாரண எழுத்தராகப் பணியாற்றுகின்றனர். அப்போது, இவர்களுக்கென மேல் படிப்புக்காக பல ஆயிரக்கணக்கில் செலவு செய்த அனைத்தும் வீண் தானே. சிலர் M. Sc தேர்வு பெற்று தொடர்பே இல்லாத பாங்கிகளிலும் தனி வணிக அலுவலகங்களிலும் பணியாற்றுகின்றனர். இவ்வாறே பலவகைகளில் தனியார் பொருளும் அரசாங்கப் பொருளும் கல்வி யெனும் பெயரால் பாழாக்கப் பெறுகின்றதை எண்ணின் எந்த நாட்டு மகனும் கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியாது. இக்குறை நீக்கும் வகையில் புதிய கல்வித் திட்டம் அமைய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இடைநிலையில் அமைக்கும் இரண்டாண்டுக் கல்வியி லேயே இதற்கு இடம் அமைக்க வேண்டும். இங்கேயும் தற்போதுள்ள படியே இரண்டு மொழிகள் நான்கு விருப்பப் பாடங்கள் என்ற நிலை சில விடங்களில் அமைக்கப் பெற்றுள்ளன அதாவது தற்போது 'PUC' வகுப்பில் உள்ள படி, மருத்துவம், பொறியியல் இவற்றுக்கு ஏற்றபாடங்கள் - அல்லாத பொதுக்கும்பல்-என்ற வகையில் அமைக்கப் பெற்றுள்ளது. தகுதி உற்றோர் பொறியியல் மருத்துவம் முதலிய தனிப்பட்ட பாடங்கள் பயிற்றும் கல்லூரிகளிலும் மற்றவர் கலை, அறிவியல் பயிற்றும் பட்டப் படிப்புக் கல்லூரிகளிலும் பயிலும் வகையிலே ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது. இதனால் மறுபடியும் வெறும் பீ. ஏ., பீ. எஸ்சி., பி. காம் போன்ற பட்டம்பெற்றவர் உருவாவதேயன்றி, நாட்டுக்கு ஏற்ற கல்வி கற்றவர் வர இயலுமா? இத் தகைய கல்வி முறை எந்த வகையில் சமுதாயத்துக்கு உதவியதாகும்? மறுபடியும் நான் மேலே காட்டியபடி

பொழுது போக்குக்காகவும் உணவுக்காகவும் சாதாரண எழுத்தர் பணிக்காகவும் படிப்பதாகவே அது அமையும் அல்லவா! பட்டம் பெற்று S. S. L. C பயின்றவரோடு சாதாரண எழுத்தர் பணிக்கு மனுப்போடும் மரபு மாய வழி இல்லையே. இந்த நிலை இனியும் கூடாது. இந்த இரண்டாண்டுக் கல்வியில் திட்டமான மாற்றங்களை நாடு எதிர் நோக்கி நிற்கின்றது.

இடைநிலைக் கல்வி பல பிரிவுகளைப் பெற்றதாக வேண்டும். கல்வி கற்பதற்கெனவே விரும்புவோருக்கெனத் தனிப்பிரிவு ஒன்று வேண்டும். அவர்கள் எந்த அரசாங்கப் பதவிக்கும் விண்ணப்பிக்க வழி வகுக்கக் கூடாது. ஒருவேளை உயர் பட்டங்கள் பெற்றால், அரசாங்க உயர்மட்ட உத்தியோகங்களுக்கு நேரடித் தேர்வில் (Direct Recruitment) கலந்து கொள்ள வாய்ப்பளிக்கலாம். சாதாரண எழுத்தர் பணிக்கு விண்ணப்பிக்கும் நிலை எந்தக் கல்லூரி மாணவனுக்கும் இருக்கக் கூடாது. கல்விக்கெனவே படிப்பவர்கள் உயர் பட்டங்களாகிய எம். ஏ., எம். எஸ்சி போன்றவற்றையும் அதற்கு மேலுள்ள ஆய்வுப் பட்டங்களையும் பயிலலாம். எனினும் அவர்களும் முற்றும் அரசாங்கத்துக்கு அவர்கள் கடமைப்பட்டவர்கள் என்பதை உணருமாறு விதிவகை செய்தல் வேண்டும். அவர்களையும் உயர் மட்டத்தில் அரசாங்கத்துக்குப் பயன் பெறு வகையில் திருப்ப வேண்டும். பல ஆயிரக்கணக்கில் செலவு செய்து 'எம். எஸ்சி' போன்ற பட்டம் பெறுபவர் அரசாங்கத்துக்கு ஒப்பந்தம் எழுதித்தரக் கடமைப்பட்டவர்களாக வேண்டும். அவ்வாறு பட்டம் பெற்றவர்களைக் குறைந்த ஊதியத்தில் கிராமத்திலோ வேறு சமுதாய நிலையிலோ பணி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். முறைப்படி உயர்ந்த பதவிகளில் இடமிருப்பின் (Grade I or II officers), பின்னர் இவர்களைச் செல்ல விடவேண்டும். அறிவியல் பயின்று

சிறந்த மதிப்பெண் பெற்றவர்களைத் தொழில் துறைகளில் ஊக்குமாறு தொழிலதிபர்களுக்கு ஆணையிட வேண்டும். தனித்தியங்கும் தொழிற் சாலைகள் அரசாங்க நேரடிப் பார்வையில் அமையின், இவ்வாறு உயர்ந்த அறிவியல் பட்டம் பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வசதி உண்டாகும். படித்து விட்டுக் குடித்தனம் நடத்துபவரோ, சோம்பித் திரிபவரோ அரசாங்கச் செலவு அனைத்தையும் திருப்பித் தரத்தக்க வகையில் வழித்துறை வகுக்கு வேண்டும். அத்தகைய ஒப்பந்த அடிப்படியிலே அவர்கள் சேர்க்கப் பெறல் வேண்டும். அவர்களுக்கு எழுத்தர் முதலிய பதவி களுக்கு விண்ணப்பிக்க வழி இல்லையாதலால், அதில் சேரு வோர் எண்ணிக்கை கட்டாயம் குறைவாகவே இருக்கும்; எனவே தரமும் சிறந்திருக்கும். பலராக இருப்பின் பணி தர முடியாதே என்று அரசாங்கம் அஞ்ச வேண்டியும் இருக்காது. 'எது கிடைக்காவிட்டாலும் எழுத்தர் வேலை கூடவா கிடைக்காது' என்ற எண்ணத்திலும் 'யாரோ பணம் தருகிறார்கள் நமக்கென்ன? படித்துத் தான் பார்ப்போமே' என்ற மேற்போக்கான உணர்விலும் படிக்கும் நிலையும் இல்லையாகும். இவ்வாறு உயர்கல்வி அமையுமாறு இந்த இரண்டாண்டுக்குரிய இடைநிலை வகுப்பிலேயே பாடங் களும் சொல்லித்தரும் முறைகளும் பிறவும் திட்டமாக அமைய வேண்டும். ஆம்! இந்த இடைநிலையாகிய நிறைந்த பேரேரியிலிருந்து பல மதகுகள் வழியே பிரியும் கால்வாய்கள் நாட்டுச் சமுதாயம் என்ற நல்ல வயல் பரப்பினை ஊட்டிப் போற்றிப் புரந்து உயர்வினைச்சுலைத் தரும் நிலை உண்டாக வேண்டும். உண்டாகும் என நம்புகிறேன்.

எழுத்தர் பதவியைப் பற்றிச் சுட்டினேன். அதுபற்றி இன்றும் சற்றே விரிவாகக் காணலாம். நம் இரண்டாண்டுப் பாடத்திட்டத்தில் இதற்கெனத் தனியாகப் பாடமுறை

வகுக்கப் பெறல் வேண்டும். சாதாரண எழுத்தர் - உயர் எழுத்தார் - மேலாளர் (Superintendent) உயர்நிலைப் பொறுப்பாளர் போன்ற பதவிகளுக்கென விண்ணப்பம் செய்வோருக்கென தனித்தனியாகப் பாடமுறைகள் வரையறுக்கப் பெறல் வேண்டும். இந்தப் பாடங்களை எடுத்துப் பயின்றவர் மட்டுமே அரசாங்க எழுத்தர் தேர்வுகளுக்கு (Grade III or IV) எழுத அனுமதிக்கப் பெறல் வேண்டும். அதற்கேற்ற வகையில் (Secretarial Course) அவர்தம் இரண்டாண்டுப் பாடமுறைகள் அமைதல் நலம். இடைநிலை இரண்டாண்டுகளில் ஒரு நிறைவு பெற்ற அலுவலகப் பணியாளனை உருப்பெறும் வகையில் பொது மக்கள் தொடர்பு, ஆட்சி முறை, தட்டெழுத்து, கணக்கிடுமுறை போன்ற அடிப்படைப் பாடங்களையும் அவற்றோடு தொடர்பானவைகளையும் அமைக்க, சீரிய முறையின் அவற்றின் தேர்வுகளும் பொருந்துமாயின் அத்தேர்வுகளில்(theory & practical)சிறக்க வெற்றி பெறுவோரை இருவகை எழுத்தர் பணிக்கும் அவை போன்ற பிறவற்றிற்கும் அரசாங்கம் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அரசாங்கம் மட்டுமன்றி, அரசாங்க மானியம் பெறும் கல்லூரி, பள்ளி முதலிய நிறுவனங்களும், அரசாங்க ஒப்புதல் (licence) பெற்ற நிறுவனங்களும் இவர்களையே எழுத்தாளர்களாக நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வேறு எத்தகைய பட்டம் பெற்றவர்களுக்கும் இத்தகைய பதவிகள் வழங்கக் கூடாது. இந்த நிலை அமையின் ஆள வருகின்றவர்கள் தம் மனம் போனபடி தகுதி உள்ளவர் - இல்லவர் யாவரையும் எல்லாத் துறைகளிலும் நுழைத்து விட்டுத் தேவைக்கு மேல் ஆள்களைக் குவிக்கும் நிலையும் பின் களை எடுக்கும் நிலையும் நேரவழியில்லை. மேலும் அரசாங்கத் துணைச் செயலர் பதவி வரைக்கும், இத்தகைய எழுத்தர், உயர் எழுத்தர் நிலையில் உள்ள சிறந்த வரை, துறை பற்றிய தனித் தேர்வுகள் அமைத்து,

உயர்த்தல் வேண்டும். தக்க தகுதி வாய்ந்தவரை இந்த நிலையில், அவரவர் செயல் திறன், செம்மை முறை. பிற இயல்புகள் அடிப்படையில் உயர்த்த வாய்ப்பு இருப்பின் அவர்தம் செயலும் செம்மையும் சிறக்க வழி உண்டாகும். தக்கவர் செயலர் பதவி வரையிலும் கூட உயர்த்தப் பெறலாம் தகுதி உள்ளவர்கள் தங்களை மேலும் தகுதி உள்ளவர்களாக்கிக் கொள்ள எத்தனையோ வகையான தேர்வு முறைகள் இன்று நாட்டில் உருவாகின்றன.

இந்த அடிப்படையிலே இரண்டாண்டு இடைநிலைக் கல்வி அமைதல் வேண்டும். இவ்வாறு அமையின் நாட்டின் கல்வித்துறையில் பெரும் மாறுதல் ஏற்படும் என்பது உறுதி. 'ஏதோ அரசாங்க மானியம் இருக்கிறது. வேலையும் இல்லை; நகர வாழ்க்கையின் இன்பம் வேறு; எனவே சென்னை போன்ற நகரங்களில் சில ஆண்டுகள் நல்ல உணவுண்டு காலம் கழிப்போம்' என எண்ணிப் பட்டம் பயில்வார் தொகை கட்டாயம் குறையும். இன்று பயில்வாருள் பாதிக்குமேல் தேர்வு பெறுமலே போவதையும் காண்கிறோம். இந்த அவல நிலையும் உண்டாகாது. பல கல்லூரிகள் தேவையற்றனவாகும். இவ்வாறு இத்துறையில் வீணாகும் கோடிக்கணக்கான பணம் வேறு தொழில் துறையில் வருவோரை ஊக்கும் வகையில் கடனாகவோ மானியமாகவோ கொடுக்கப் பயன்படுமே. 'பட்டம் பெற்றும் பதவிக்குறுமே' என்ற அவலக் குரலும் இல்லையாகும்; பெரும்பாலும் அரசாங்க உத்தியோகத்துக்கு ஏற்ற படிப்பினை இந்த இரண்டு ஆண்டுகளில் பயின்று உண்மையில் பொதுமக்கள் தொண்டராக (Public Servants) பணியாற்றும் பொறுப்பில் சிறக்க நிற்பர். மருத்துவம் முதலிய தனிப் படிப்பினைப் பயிலுபவர் அந்தந்தத் துறைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றுச் சிறக்கப் பயில வாய்ப்பும் உண்டு. இரண்டாண்டுகளில்

மருத்துவக்கல்விக்குப் பயின்றவர் பின் அரசாங்க ஊழியர் துறைக்கோ வேறு நிலைக்கோ செல்ல வழியிருக்கக் கூடாது. இருப்பின் மறுபடியும் 'எது இல்லாவிட்டாலும் இது என்ற நிலை உண்டாகும் அவல நிலைக்கே ஆளாவோம. அப்படியே கலை, அறிவியல் பயில விரும்புவோருக்கு எனவே தகுதிபெறும் வகையில் அந்தந்தப் பாடங்கள் அமைய வேண்டும். 'ஒன்றில் இடம் கிடைக்கவில்லை; எனவே வேறொன்றுக்குத் தாவுகிறேன்' என்று இன்றுள்ள நிலை இருக்கக் கூடாது. எனவே மாநில, மத்திய அரசாங்கங்கள் இந்த வகையில் எண்ணிச் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பாடத் திட்டத்தை இனி அமைக்க இருக்கும் தமிழக அரசும் அதன் செயலரும் கல்வித்துறை நெறியாளரும் இவற்றை எண்ணி, நல்லதொரு பாடத்திட்டத்தை நாட்டுக்கு நல்கி, அனைத்திந்தியாவுக்கும் நாம் முன்னோடியாக உள்ளோம் என்பதை நிறுவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த முறையில் அரசாங்கத்துக்குப் பலகோடி வீண் செலவு என்பது அற்று, பயனுள்ள வகையில் அக்கோடிகோடிப் பணமும் செலவாவதோடு சமுதாயத்துக்கும் நல்ல முறைக் கல்வி அமைந்தது என்ற மன நிறைவும் உண்டாகும். கல்வியாளர்கள் இத்துறையில் கருத்திருத்துவார்களாக!

இந்த முறையுடன் தொழிற்கல்வியும் இந்த இரண்டாண்டுத் திட்டத்தில் இடம் பெற வேண்டும். மத்திய கல்விக் குழுவின் பாடத்திட்டத்தில் தொழிற்கல்வி போதிய இடம் பெற வில்லை போலும். தொழிற் கல்விக்குப் பத்தாம் வகுப்பில் முற்றுப்புள்ளி வைத்தல் கூடாது. இந்த இரண்டு ஆண்டுகளே பயில்வாரின் வருங்காலத்தை வரையறுப்பன ஆனமையின் பயில்வார் ஒவ்வொருவருக்கும், அவரவர் தகுதி, திறன், செயல்முறை, சூழல், சமுதாய அமைப்பு இவற்றின் அடிப்படையில் அமைந்த கலை

அறிவியல், தொழில், பணி ஆகியவை பற்றிய கல்வியில் திறன்பெற வாய்ப்பினை அளிக்க வேண்டும். சாதி அடிப்படையிலோ அன்றி வேறு குறுகிய மனப்பான்மை அடிப்படையிலோ என்று இல்லாமல், இத்தகைய வாய்ப்பினை எல்லோருக்கும் அளிக்கும் வகையில் இவை அமைய வேண்டும். அவரவர் விரும்பும் தொழிலையோ, பிற வகைக் கல்வியையோ தேர்ந்தெடுத்து, அவ்வவற்றில் அவர்கள் வெற்றி பெற வாய்ப்பு அளிப்பதோடு, பின் தொடர்ந்து அவரவர் கல்வி அல்லது செயல்முறை அல்லது பணி பெறும் வகைக்கும் அரசாங்கம் வழிசெய்ய வேண்டும். அனைவருக்கும் அனைத்தும் தரமுடியும் என்பது இயலாது; எனினும் தகுதியும் திறனும் வாய்ந்தவர்கள், இந்த வகையில் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பார்களானால் அவர்களை மேல் படிப்புக்கோ பணிக்கோ தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். எண்ணிக்கை அதிகமாயின் தேறிய அனைவருக்கும் இடம் என்றில்லாமல் அங்கேயும் தேர்வு முறைகொண்டு சிறந்தவரைத் தேர்ந்தெடுத்தல் கட்டாயப் படுத்தல் வேண்டும். அப்படியே இந்த இரண்டாண்டு வகுப்பில் சேர்வதற்கும் ஒரு வரையறை வேண்டும். தற்போதுள்ள 'S.S.L.C.' ல் முதல் முறையிலேயே 350 (அ) 400 பெற்றவர்கள் P. U. C. ல் இடம் கிடைக்காது வாட, வசதியும் சிபார்சும் உள்ளவர் தம் பிள்ளைகளுக்கு ஐந்தாவது முறையில் 220 பெற்ற போதிலும் இடம்பெறும் கொடுமை இனி நாட்டில் இல்லையாகச் செய்ய வேண்டும். பத்தாம் வகுப்பிலிருந்து இந்த இடைநிலைக்கு வருபவர்களுக்கும் இந்த நிலை வரையறுக்கப் பெறல் வேண்டும். மருத்துவக் கல்லூரிக்கோ, பிற பொறியியல் போன்றவற்றிற்கோ இந்த முறை இருப்பதறிவோம். எனவே இடைநிலை வகுப்பில் இடம்பெறும் மாணவர் பத்தாம் வகுப்புத் தேர்வில் முதல் முறை வெற்றி பெற்றவராகவும் நூற்றுக்கு

ஐம்பதுக்குக் குறையாத மதிப்பெண் வாங்குபவர்களாகவும் இருக்க வழிசெய்ய வேண்டும். இதே முறை இந்த இரண்டாண்டில் தேர்ச்சி பெற்று மேல்படிப்புக்கோ அரசாங்கப் பணிக்கோ செல்லும்போதும் வற்புறுத்தப் பெறல் வேண்டும். அப்போது எல்லா நிலைக்கும் தகுதி பெற்றவர்களே வரவாய்ப்பு உண்டு. தாழ்த்தப் பட்டோருக்கோ அன்றி ஓதுக்கப் பட்டோருக்கோ, பிற வகைகளில் சலுகை காட்டுவது போன்று இதிலும் தக்க சலுகை அளிக்கலாம். எம்படியாயினும் நாட்டுக் கல்வி அனைவரும் கற்கவேண்டும் என்ற அடிப்படையோடு, அவருள் தகுதியுள்ளோர் தக்க நிலையில் உயர்த்தப் பெறவேண்டிய நிலையும் எண்ணப் பெறவேண்டும். தகுதிஉற்றோர் சிபாரிசோ வேறு உடன் துணையோ இன்றி வாட, மேல் தளத்தில் உள்ளோர் பணம், பதவி, பட்டம், சிபார்சு முதலியவற்றுல் தகுதியின் நிறனும் உயரிடம் பெறும் கொடுமை நாட்டில் இல்லையாகச் செய்ய வேண்டும். 'எல்லாரும் எல்லாச் செல்வமும்' எய்த வேண்டும் என எண்ணிச் செயலாற்றும் இன்றைய பாரத அரசாங்கத்துக்கு கல்வித் துறையில் இத்தகைய தேவையான மாற்றங்கள் செய்வதில் கடினமில்லை என எண்ணுகிறேன். நம் மாநிலம் அதற்கு வழி காட்டியாக முதலில் செயல்பட வேண்டும் என்பது என் ஆசை.

இவற்றுடன் உடற் பயிற்சியும் உடலோம்பல் பற்றிய பாடமும் (Health Education) முக்கிய இடம்பெறல் வேண்டும். நல்ல உடல் நலம் இல்லாத பிள்ளைகள் முறையாகப் பள்ளிக்கு வருவதும் இயலுவதில்லை; வந்தாலும் பாடங்களைப் பயிலவும் முடிவதில்லை. 'உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து, உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்பது திருமூலர் நமக்குத் தந்த வாக்கு. எனவே உடல் நன்றாக இருந்தால்தான் உழைத்துச் செயலாற்றவோ, உணர்ந்து பாடம் படிக்கவோ இயலும்.

இந்த நிலை பள்ளியிலும் இடை நிலையிலும் போற்றப் பெறல் வேண்டும்.

உடற் பயிற்சியில் வெறும் பயிற்சி வகுப்புக்கள் மட்டும் அல்லாது பல்வேறு வகை விளையாட்டுக்கள் இடம் பெறல் வேண்டும். தற்போதைய கல்விமுறையில் எத்தனையோ வகையான பந்தாட்டங்கள் உள்ளன. அவற்றுள் சில நம்நாட்டு இயல்புக்கு ஒவ்வாதனவாகி, மேலை நாட்டாரின் இயல்புக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன. எனினும் அவற்றை நாம் கைவிடவில்லை; இனியும் விடமாட்டோம் என எண்ணுகிறேன். அது எப்படியாயினும் நம் நாட்டுக் கலை நலம் வாய்ந்த உடற் பயிற்சியினை பாடத் திட்டத்தில் இணைக்க வேண்டும். நாட்டுப் பாடல்களும் அப்பாடல்கள் வழி அமையும் கூட்டு நடனங்களும் பள்ளித் திட்டத்தில் இடம்பெற வேண்டும். அமெரிக்க நாட்டிலும் பிற மேலை நாடுகளிலும் அவை இடம் பெற்று நெடுங்காலம் கடந்து விட்டது. அவற்றுல் மக்கள் உடல் உரம் பெறுவதோடு, நாட்டு மக்களின் தொன்மையான ஆடல், பாடல் விளையாட்டு முதலிய வற்றை அறிந்து அவை என்றும் வாழ வழிகாணும் நிலையில் ஆவன செய்ய முயல்வர். நம்நாட்டுக் கிராம விளையாட்டுக்கள் — ஆண்கள் பெண்கள் தனித் தனியாகவும் இணைந்து விளையாடுவன — பல தற்போது நாம் அறியா வகையில் மறைந்து விட்டன. அவற்றிற்குப் புத்துயிர் அளிக்கும் வகையிலும் பழைய போற்றிப் பாதுகாக்கும் முறையிலும் அவற்றுல் பயன்பெறும் முறையிலும் அவற்றையும் பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும்.

சமுதாயத் தொண்டும் (Social Service) பாடத் திட்டத்தில் இன்றியமையாதது. கல்லூரி வகுப்புக்களில் பட்டம் பெறுவாருக்குப் புதிய பாடத்திட்ட முறையில்

(Semester) இந்தப் பணி உள் மதிப்பீட்டு முறையில் (Internal assessment) இணைக்கப் பட்டுள்ளது. இந்த இடை நிலையிலும் அச்சமுதாயப் பணி இடம் பெறல் வேண்டும்.

சமுதாயப்பணி என்பது ஏதோ வாரத்துக்கு ஒரு நாள் எங்கோ ஒரு மூலையில் சென்று கூட்டி விட்டுக் கூட்டம் கூடிப் பேசி வந்து விடுவதாகாது. உண்மையிலே சமூகத் தொண்டு நாட்டு மக்கள் வாழ்வோடு பொருந்தியதாக அமைய வேண்டும். அதற்கென இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் தனித்த ஒரு பிரிவினையே அமைத்துள்ளன. அத்துறையினர் இந்த வகையில் கல்வித் துறைக்கு உதவி செய்ய முன்வர வேண்டும். மொத்தத்தில் மக்களினத்தில் உற்றூர் அற்றூர் — உயர்ந்தார் தாழ்ந்தார் — செல்வர் வறியர் — கற்றூர் கல்லார் — படித்தார் பாமரர் என்பன போன்ற வேறுபாடு களைக் காணு வகையில் சமூகத் தொண்டு அமைய வேண்டும். 'நான்' 'எனது' என்ற செருக்குகள் அந்த தொண்டில் தலை காட்டக் கூடாது. 'நாம்' 'நமது' என்ற கூட்டுணர்வே அங்கே வேண்டப் பெறுவது. இந்த நல்லுணர்வோடு நலம் நிறைந்த கல்வியும் கலக்குமானால் ஒரே தலைமுறையில் உலக நாடுகள் அனைத்தினும் நம் பாரதம் உயர்ந்ததாகி, மனிதப் பண்பினை வளர்க்கும் நெறியை உலகுக்கு உணர்த்தி வழிகாட்டியாக அமையும். மிகப் பழங் காலந்தொட்டு அப்பரும் பிறரும் காந்தியும் மற்றவரும் இந்தச் சமூகத் தொண்டால் தரணியை வாழ வைத்தனர். வரும் இந்த இரண்டாண்டுகளில் கற்க வேண்டிய கல்வியைக் கற்பதோடு அக்கல்வியால் வாழ இருக்கும் சமுதாயத்தோடு தாமும் இணைந்து செயல்பட வேண்டிய சமூகத் தொண்டினையும் உளத்தால் போற்றும் வகையில் பாடத் திட்டம் அமைய வேண்டும்.

இத்தகைய சிறந்த எற்பாடுகளால் நலலார் வாட அல்லார் வாழும் நெறி இல்லாமல் போவதோடு, எதையோ படித்து எந்த வேலையோ செய்கின்றோம் எந்த அவல நிலையும் இல்லையாகும். எனவே இந்த இரண்டாண்டுக் கல்வி முறை சமுதாய நலனை உள்ளத்தில் வைத்தே வகுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். வாழும் மனிதனுக்கு அவன் இளமையில் பயிலும் பள்ளிக் கல்விக்கும் வளரும் பிற்கால வாழ்வும் இடையில் ஒரு பாலமாக அமைகின்ற இந்த இரண்டாண்டுக் கல்வி, அவனைக் கைபிடித்து நேரிய வழியில் அழைத்துச் சென்று தன் எல்லைத் தாண்டிய பின் பிரியும் பல சாலைகளில் அவன் செல்லத் தக்க சாலை இது என ஆற்றுப்படுத்த வேண்டுவதாகும். பல வகையில் தமிழகம் நாட்டுக்கு முன்னோடியாக முன்னெல்லாம் பல நல்ல செயல்களையெல்லாம் செய்தமை போன்று இன்றும் இந்தக் கல்வி முறையைச் செம்மையான வழியில் அமைத்துச் செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய அரசும், எல்லா மாநிலங்களையும் — அவற்றின் செயலர் — நெறியாளார் ஆகியோரையும் அழைத்து, அனைத்திந்திய அடிப்படையில் இக்கல்வி முறைக்கான ஆக்க நெறியை வகுத்து வழிகாண வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நெறி பற்றியும் இவற்றிற்கான பல வழித் துறைகள் பற்றியும் எத்தனையோ எண்ணியுள்ளேன். எனினும் தற்போது இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன். அனைத்தும் உருவாகும் நிலையில் இதன் நிலை கண்டு இதுபற்றியும் அடுத்து வரும் கல்லூரி நிலை பற்றியும் எழுத எண்ணி இத்துடன் இப்போது அமைகின்றேன். வணக்கம்.

(நன்னூல்)

நல்ல நூலின் தன்மை*

விஞையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூ லாகும்

நூல்

உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமை
புரத்தி ன் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்
கனக் கோட்டங் தீர்க்குநூல் அ:தேபோல் மாந்தர்
மனக் கோட்டங் தீர்க்குநூல் மாண்பு

பத்துக் குற்றம்

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழுஉச் சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றென்று விரித்தல்
சென்று தேய்ந்திறுதல் நின்று பயனின்மை
என்றிவை ஈரைங் குற்றம் நூற்கே.

பத்து அழகு

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலக மலியாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது
ஆகுதல் நூற்கு அழகெனும் பத்தே

---

* இத்தகைய நல்ல நூல்களை அரசாங்கமும் பிறரும் எழுதி வெளியிட, அடுத்து நன்னூல் காட்டியநிலையில் நல்ல ஆசிரியர்களும் கருத்துடைய மாணவர்களும் அமைவராயின் நாட்டுக் கல்வி நலம் பெற்று ஓங்கும் என்பது உறுதி.

நல்ல ஆசிரியன் இலக்கணம்

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலிபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலி நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூல் உரை ஆசிரியன்னே!

ஆசிரியராகாதவர்

மொழிகுண மின்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவா வஞ்சம் அச்சம் ஆடலும்
கழற்குடம் மடப்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பன முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆசிரிய ராகுதலே

பாடம் சொல்லும் முறை

ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் பகுபொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல்கொடுத்த லென்ப.

நல்ல மாணவர் தன்மை

அன்னம் ஆவே மண்ணெடு கிளியே
இல்லக் குடம்ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலைஇடை கடை மாணாக்கர்

மாணவரா கார்

களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை[1] பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி[2]
படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே

பாடம் கேட்கும் முறை

கோடல் மாபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன் குறிப்பில் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவி வாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
'ஊபா'வெனப் போதல் என்மனார் புலவர்

நூல் பயிலும் முறை

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினுதல் வினயவை விடுத்தல் என்றிவை
கடனுக் கொளினே மடநனி இகக்கும்

---

[1] ஏது சொல்லினும் அறிவு திருந்தப் பெறுதவன்

[2] பாவத்துக்கு அஞ்சாதவன்

பிற்சேர்க்கை 2

புதிய கல்வி முறைக்கு ஒரு எடுத்துக்காட்டு

Scheme of subjects for the Higher Secondary Classes

Compulsory Languages:

Students in Stds. XI and XII will have to offer two languages as compulsory subjects; one at a higher level and the other at a lower level or both at a higher level, selecting one from each of the following two groups and any four optional subjects:-

(i) English (Higher Level) or English (Lower Level).

(ii) Modern Indian Language or a Modern foreign language (Higher level) or
Modern Indian Language or Modern foreign language (lower Level),

List of optional Subjects:

Forty five subjects including languages, sciences, arts & technical are given under their heading

* * *

The standard of passing in each subject should be 40 percent and students will have to pass in all the 6 subjects. The rules of condonation would be framed by the Maharashtra State Board of Secondary Education.

Certificate Subjects

i) One of the following:
N. C. C.
N. S. S.
Physical Education and

ii) Work Experience (Only for those who will be selecting Arts or Commerce Faculty.)

அ. மு. ப. வின் நூல்கள் (உள்ளன)

1.	கவிதையும் வாழ்க்கையும்	...	10	00
2.	தமிழக வரலாறு	...	10	00
3.	காப்பியக் கதைகள்	...	5	00
4.	வாழ்வுப் பாதை (நாவல்)	...	6	00
5.	தமிழ் உரை நடை	...	6	00
6.	வையைத் தமிழ்	...	4	00
7.	வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும்	...	4	00
8.	இளமையின் நினைவுகள்	...	4	00
9.	கங்கைக் கரையில் காவிரித் தமிழ்	...	5	00
10.	சமயமும் சமூகமும்	...	3	00
11.	துன்பச் சுழல்	...	3	00
12.	மக்கட் செல்வம்	...	2	00
13.	தமிழ் நாட்டு விழாக்கள்	...	2	00
14.	பெண்	...	2	00
15.	மனிதன் எங்கே செல்கிறான்	...	2	00
16.	மணி பல்லவம்	...	2	00
17.	சமுதாயமும் பண்பாடும்	...	10	00
18.	தொழில் வளம்	...	5	00
19.	வாய்மொழி இலக்கியம்	...	4	00
20.	எல்லோரும் வாழ வேண்டும்	...	3	00
21.	வெள்ளி விழாச் சொற்பொழிவுகள்	...	3	00
22.	வழுவிலா மணிவாசகர்	...	2	00
23.	மலை வாழ் மக்கள் மாண்பு	...	5	00
24.	வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி	...	2	50
25.	கவிதை யுள்ளம்	...	5	00
26	கொய்த்த மலர்கள்	...	4	50
27.	Gleanings of Tamil culture	...	2	00
28.	வாணெலி வழியே	...	3	50
29.	நாலும் இரண்டும்	...	2	50
30.	19ம் நூற்றாண்டின் தமிழ் உரை நடை வளர்ச்சி	...	7	00
31.	சிறுவர்களுக்கு	...	2	50
32.	புதிய கல்வி முறை	...	3	00

பிற (30) அச்சில் உள்ளன.

தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை. 30